வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.02.2023 வியாழக்கிழமை | இதழ் : 62 | பக்கங்கள் : 16




# பொலிஸ் அதிகாரம் இல்லாது 13ஆம் திருத்தம் நடைமுறை

## பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில் உறுதி

கொழும்பு, பெப்ரவரி 09

**ஒற்றையாட்சிக்குள் அதிகபட்ச அதிகாரப்பகிர்வை வழங்கி இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் அதிகாரம் பகிரப்படாது என்றும் கூறியுள்ளார்.**



9ஆவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வு நேற்று ஆரம்பமானது. இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை பிரகடன உரையை ஆற்றினார். இதன்போதே, மேற்படி விடயத்தை அவர் வெளிப்படுத்தினார்.

அவரின் உரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“சம்பந்தனும் நானும் 1977 ஆம்

15

## வரிக் கொள்கை விரைவில் மாறும்

### அமைச்சர் பந்துல

கொழும்பு, பெப். 09

நட்டமடையும் அரச நிறுவனங்களின் சுமையை நாட்டு மக்கள் சுமக்க வேண்டியுள்ளதால் நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதை தவிர மாற்று வழிகள் ஏதும் தற்போது கிடையாது. வரி கொள்கை வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று

15

## சலுகைகளுக்கு வரி விலக்கு!

கொழும்பு, பெப். 09

அரச ஊழியர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடங்களில் வழங்கப்படும் பணமல்லாத சலுகைகளுக்கு உழைக்கும்போது செலுத்தும் புதிய வரி முறைமையில் இருந்து விலக்கு அளிக்கும் சுற்றறிக்கையை உள்நாட்டு இறைவரி திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு அவர்களின் பணியிடங்களில் வழங்கப்படும் வாகனங்கள்,

15



## 13இற்கு எதிராக கொழும்பில் நேற்று திரண்டனர் பிக்குகள்!

### பொலிஸாருடன் கடும் முறுகல்

கொழும்பு, பெப். 09

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பாராளுமன்றத்துக்கு பிரவேசிக்கும் பொல்துவ சந்திக்கு அருகில் பௌத்த பிக்குமார் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது, பிக்குமாருக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது.

பொல்துவ சந்தியில் இருந்து நாடாளுமன்றத்தை நோக்கி செல்ல முற்பட்ட

15

## தமிழ் அரசியல் கைதிகள் கட்டம்கட்டமாக விடுதலை

### காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிவதற்கான முறைமையையும் நாம் துரிதப்படுத்துவோம்

கொழும்பு, பெப். 09

“பயங்கரவாதச் செயல்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பெயரில் சிறை வைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றியும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

எந்தவொரு வழக்கு விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாக அவர்கள்

15

## அரசியல் தீர்வை எட்ட ஒத்துழைப்பு தாருங்கள்

### ஜனாதிபதி சபையில் அழைப்பு

கொழும்பு, பெப். 09

“நானும், இரா. சம்பந்தனும் 1977 ஆம் ஆண்டு தான் பாராளுமன்றத்துக்கு தெரிவானோம். நாம் இருவரும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் காலப்பகுதிக்குள்ளேயே தேசிய இனப்பிரச்னைக்கு நிலையான தொரு தீர்வைக் கண்டு

## வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு விசேடமான அபிவிருத்தித் திட்டம்!

### கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 09

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்காக விசேட அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஆற்றிய அரசாங்கத்தின் கொள்கை

15

## மக்கள் பேரணியில் பங்கேற்ற 7 பேர் விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 09

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி பேரணியில் பங்கேற்றமைக்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேரை யாழ்ப்பாண தலைமையக பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழரசு கட்சியின்

15

## தேர்தலுக்கான நிதியை தர திறைசேரிக்கு உத்தரவிடுக!

### நீதிமன்றில் கோரினார் ஆணையாளர்

கொழும்பு, பெப். 09

திறைசேரி செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதியை விடுவிக்க தவறியதன் காரணமாக, தேர்தல்கள் ஆணைக் குழு பெரும் சிரமத்தை எதிர்நோக்கி

15

## ஒற்றையாட்சியா சமஷ்டியா? இது தற்போது பிரச்னையல்ல

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கொழும்பு, பெப். 09

ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டி ஆட்சியா என்பது தற்போதைய பிரச்னையல்ல.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பது தற்போதைய பிரதான இலக்காக கருத வேண் டும் என்று

15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023

தமிழ் தேசிய கூட்டமைப்பு

தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

X

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி தேர்தல்கள் திட்டமிட்டபடி மார்ச் ஒன்பதாம் திகதி நடைபெறுமா என்பதே இன்று எல்லோரிடமும் உள்ள கேள்வி.

தேர்தலை நடத்தக்கூடாது என்று உத்தரவிடக்கோரி ஒரு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி தாக்கல் செய்த வழக்கும் தேர்தலை நடத்த வேண்டும் என்று உத்தரவிடக்கோரி அரசியல் கட்சிகள் சில தாக்கல் செய்துள்ள வழக்குகளும் தற்போது ஒரே வழக்காகவே விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வழக்குகள் மீதான தீர்ப்பு எதிர்வரும் பத்தாம் திகதி - அதாவது நாளை உயர் நீதிமன்றத்தில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால்தான் அந்தத் தீர்ப்பு தேர்தல்கள் நடப்பதை ஒத்திவைக்க ஆலோசனை சொல்லலாம் என்று ஒரு தரப்பும் மக்களின் அரசியல் உரிமை என்பதே வாக்களிக்கும் உரிமைதான். அதனை தடுக்கும் வகையில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்காது என்று மற்றுமொரு தரப்பும் நம்பிக்கை வெளியிட்டு வருகின்றது.

தேர்தல் நடந்தால் நாடு மீண்டும் ஒரு வரிசை யுகத்துக்கு செல்லவேண்டியிருக்கும் என்று நிதித்துறை சார்ந்தவர்கள் எச்சரித்து வருகின்றனர்.

தற்போது மாதம் ஒன்றுக்கு இருநூற்று ஐம்பது மில்லியன் டொலர்களுக்கு எரிபொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. தேர்தல் ஒன்பதாம் திகதி நடைபெற்றால் தேர்தல் பிரசாரத்துக்காக சுமார் எண்பதாயிரம் வேட்பாளர்களும் அவர்களது பிரசாரத்துக்காக எதிர்வரும் முப்பது நாட்களும் ஓடித்திரிவதற்காக பலமடங்கு எரிபொருட்களை பயன் படுத்து வர். இதற்காக எதிர்வரும் காலங்களில் இரண்டு மடங்கு எரிபொருள் தேவை ஏற்பட லாம். அதற்காக அதிகமான டொலர்கள் தேவை வரும். அதற்கு அரசாங்கத்தால் முடியாதபோது மீண்டும் எரிபொருளுக்கான வரிசைகள் ஏற்படுவதை தவிர்க்கமுடியாது என்கின்றன விசயமறிந்த வட்டாரங்கள்.

அவை மாத்திரமல்ல, வேட்பாளர்கள், அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக தம்மிடமுள்ள கறுப்புப் பணம் முழுவதையும் வெளியே எடுத்து செலவு செய்வார்கள். மக்களிடம் தாராளமாக பணப் புழக்கம் ஏற்படும். அவர்கள் பருப்பை வாங்குவதென்றாலும் அதனை அதிகமாக இறங்குமதி செய்யவேண்டி வரும். அதற்கும் டொலர்கள்தான் தேவை.

அப்படி இந்த நாடு எல்லாவற்றுக்குமே இறக்குமதியை நம்பியிருக்கும்போது நிதியியலாளர்கள் சொல்வதுபோல நெருக்கடி ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் தவிர்க்கமுடியாது தான்.

அதற்காக தேர்தலை ஒத்திவைப்பது என்பதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. இந்த உள்ளூராட்சி தேர்தல் மூலம் மக்கள் புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தப் போவதில்லைத்தான்.

ஆனாலும், இந்த தேர்தல் மூலம் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு எதிரான தமது விருப்பத்தை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமே தவிர, அரசாங்கத்தை மாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை இந்த தேர்தல் வழங்கப்போவதில்லை.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த அரசியல்கட்சி ஒன்றின் தலைவர், அவரைக் கேட்டிருக்கிறார், 'சேர் உள்ளூராட்சி தேர்தல் நடக்குமா?' என்று. அவர் உடனே அவரிடமே திருப்பக் கேட்டார், 'தேர்தல் நடக்கவேண்டும் என்று நீர் விரும்புகின்றீரா?' என்று.

அதற்கு இந்தத் தலைவர், 'நாடு இன்னமும் கொஞ்சம் பொருளாதார ரீதியில் நிமிர்ந்த பின்னர் தேர்தல் நடத்துவது தான் நல்லது' என்றிருக்கிறார்.

ஜனாதிபதி சொன்னாராம்: 'நீர் மாத்திரமல்ல, என்னைச் சந்திக்கின்ற எதிர்க்கட்சி எம். பிக்கள் மாத்திரமல்ல அனைத்துத் தரப்பினருமே உள்ளூராட்சி தேர்தல் அவசியமில்லை என்றுதான் சொல்கிறார்கள். ஆனால், வெளியே போய் நின்றுகொண்டு தேர்தலை நடத்துவதை அரசாங்கம் விரும்பவில்லை என்றும் தேர்தலை ஒத்திவைக்கவே அரசாங்கம் முயற்சிசெய்வதாகவும் கோஷம் போடுகின்றனர்' என்றாராம்.

எது எப்படியிருப்பினும் தேர்தல் நடக்குமா இல்லையா என்பது நாளை தெரிந்துவிடும் என்று நம்பப்படுகின்றது.

அதனால்தான் நமது 'சட்ட மேதை'யும் பத்தாம் திகதி வரை வேட்பாளர்களை பணத்தை செலவு செய்து பிரசாரம் செய்ய வேண்டாம் என்று ஆலோசனை சொல்லியிருக்கிறாராம்.

நாமும் பொறுத்திருந்து பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி**

# ஒற்றையாட்சிக்குள் தீர்வை ஏற்றுக்கொள்ளவே முடியாது

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 09

ஒற்றையாட்சி முறைமைக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அர்த்தமுள்ள அதிகார பகிர்வை கோருகிறோம். அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அரச மைப்பில் உள்வாங்கப்பட் டுள்ளது. அரசமைப்பை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு. அதனை விடுத்து செயல்பட்டால் ஜனாதிபதி அரசமைப்பை மீறினார் எனக் கருதப்படும். உரிமைகளுக்காக அகிம்சை வழியில் போராடுவோம் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி உரையாற்றினார். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை பிரகடன உரையில் பல விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் தீர்வு விவகாரத்தில் ஏகிய ராஜ்ய என்ற சொற்பதத்தை பாவித்துள்ளார். அது ஒற்றையாட்சி முறைமையை குறிக்குமாயின் அதனை முழுமையாக புறக்கணிப்போம். அதியுச்ச அதியுச்ச அதிகார பகிர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு ஒற்றையாட்சி முறைமைக்குள் அர்த்தமுள்ள அதிகார பகிர்வு சாத்தியமற்றது.- என்றார். (ஐ)

# கிளிநொச்சி பொது வைத்தியசாலை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

கிளிநொச்சி, பெப். 09

நியாயமற்ற வரி கொள்கை உள்ளிட்ட பல விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையின் வைத்தியர்கள் நேற்றுக் காலை 8.00 மணி தொடக்கம் 24 மணித்தியாலய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங் கொடுத்தனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர நோயாளர் பிரிவு , நோயாளர் விடுதி , விபத்துப்பிரிவு , சத்திர சிகிச்சை பிரிவு உட்பட்ட சில சேவைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வைத்தியர்கள் சேவைகளில் ஈடுபட்டனர்.

வெளிநோயாளர் பிரிவு , கிளினிக் பிரிவு போன்ற ஏனைய சேவைகளிலிருந்து வைத்தியர்கள் முற்றாக விலகி 24 மணிநேர பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (அ)

# வங்கி ஊழியர்கள் யாழில் போராட்டம்!




யாழ்ப்பாணம், பெப். 09

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன் பாக வங்கி ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் நேற்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியுடன் வங்கி ஊழியர்கள் அரை நாள் வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வங்கி ஊழியர்களின் சம்பளத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக் கொள்கைக்கு எதிர்ப்பை வெளியிடும் முகமாக இலங்கை வங்கி ஊழியர் சங்கம் நேற்று அரைநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# மீட்ட பணத்தை கேட்ட கோட்டா மறுத்தது கோட்டை நீதிமன்றம்

கொழும்பு, பெப். 09

அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகைக்கு சென்ற செயல்பாட்டாளர்களால் மீட்கப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபாயை தருமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று நிராகரித்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 431ஆவது பிரிவின்படி, அத்துடன் இலஞ்ச ஊழல் சட்டம், பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்தப் பணம் குறித்து விசாரணை நடத்துவது நீதிமன்றத்தின் பொறுப்பாகும் என்று கூறி மனுவை நீதிவான் நிராகரித்தார். .

இந்த பணம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. இந்த பணத்துக்கு வேறு யாரும் உரிமை கோராவிட்டாலும் பணத்தை விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் நீதிவான் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி ஹறிகுப்த ரோஹண தீர, பணத்துக்கு வேறு எந்த தரப்பினரும் உரிமை கோராத காரணத்தால் பணத்தை தனது கட்சிக்காரருக்கு வழங்குமாறு கோரியிருந்ததை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
09.02.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இது காவிகளின் தேசமா?

சிங்கள தேசிய வாதமும் பௌத்த மதவாதமும் பின்னிப் பிணைந்திருப்பவை. நாட்டின் அரசியல் சாசனத்துக்கும் அப்பால்பட்டவர்களான ஒரு தோற்றம் பௌத்த மதபீடங்களுக்கு உண்டு. இஸ்லாமிய மதவாதத்தின் பிடிக்குள் சிக்கியிருக்கின்ற பாகிஸ்தானில் கூட மதத் தலைவர்கள் நாட்டின் அரசியல் சாசனத்தில் தலையீடு செய்வ தில்லை. ஈரானிய ஆன்மிக தலைவருக்கு அவ்வாறானதோர் அளவுகடந்த செல்வாக்கு உண்டு. இலங்கை ஒரு ஜனநாயக மரபுகளை பேணிக்கொள்ளும் நாடாக வெளியில் காண்பித்துக் கொண்டாலும்கூட மறைமுகமாக அனைத்து அரசியல் தீர்மானங்களிலும் பௌத்த பீடங்கள் ஏதோவொரு வகையில் மூக்கை நுழைக்கின்றன. இறுதியில் அவர்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசியல்வாதிகளுக்கு ஏற்படுகின்றது.

நல்லாட்சி காலத்தில் பௌத்த மதபீடங்களிடம் புதிய அரசியல் யாப்புக்கான நகலை சமர்ப்பித்து ஆலோசனை கேட்ட கதை பலரும் அறிந்ததே. அரசியல் யாப்புக்கு மதபீடங்களிடம் ஆலோசனை கேட்கும் ஒரேயொரு நாடு இலங்கைத் தீவு மட்டும்தான்.

மகிந்த ராஜபக்ஷ பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திலிருந்தபோது காவிகளின் எல்லையற்ற அரசியல் தலையீடுகளுக்கான கதவுகளைத் திறந்திருந்தனர். ஞானசார தேரரின் தலைமையில் பொதுபல சேனா என்னும் அமைப்பு தலைவிரித்தாடுவதற்கு அனுமதியளித்திருந்தனர். கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிர சாரத்தில் முன்னணி பௌத்த பிக்குகள் பலர் நேரடியாக ஈடுபட்ட னர். 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமலாக்கி பௌத்த அரசியல் சாசனமொன்றை கொண்டுவருவதற்காகவே கோட்டாபயவின் வெற்றியை அவர்கள் விரும்பினர். கோட்டாபயவும் அவர்களின் விருப்பத்துக்கு ஏற்பவே செயல்பட்டிருந்தார். தன்னையொரு பௌத்த - சிங்கள தலைவரென்று பிரகடனம் செய்திருந்தார்.

பௌத்த பிக்குகளை முதன்முதலாக அரசியலுக்குள் கொண்டு வந்தவர்கள் ஜாதிக ஹெல உறுமயவினர். அதன் பின்னர் பிக்குகளை தங்களின் குடும்ப அதிகாரத்துக்காக பயன்படுத்தியவர்கள் ராஜபக்ஷக்கள். நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் முயற்சிகள் அனைத்தையும் தடுப்பவர்களாகவே பௌத்த பிக்குகள் இருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து 13ஆவது திருத்தச்சட்டத்தின் நகலை எரித்து - எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். 13ஆவது திருத்தச் சட்டம் நாட்டின் அரசியலமைப்பு. நாட்டின் அரசியலமைப்பை அமுல்படுத்துவதைத் தடுக்க முற்படுவர்கள் சட்டத்தின் முன்னால் கடுமையான குற்றவாளிகள். அவ்வாறானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடிய வல்லமையுடன் ஆட்சியாளர்கள் இருக்கின்றனரா? வடக்கு - கிழக்கில் பேரணிகளில் ஈடுபடுபவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்படுகின்றது. நாட்டின் அரசியலமைப்புக்கு எதிராக வீதிகளில் இறங்கி மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் எல்லே குணவங்ச தேரருக்கு எதிராக அழைப்பாணை விடுக்கப்படுமா?

தேரர்களோடு இணைந்து தமிழ் மக்களின் நலன்களை பேணிக்கொள்ள முடியுமென்று கூறி வடக்கு - கிழக்கில் இந்து குழுவொன்று செயல்பட்டது. பொதுபல சேனாவுடன் தொடர்புகளை பேணினர். அவர்கள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கின்றனர்?

# தேர்தலுக்கு இடையூறு விளைவித்தால் மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை!

## சுட்டிக்காட்டுகிறார் விஜித ஹேரத்

*கொழும்பு, பெப். 09*

*தேர்தலுக்கு யாரும் இடையூறு செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அரசமைப்பின் 104ஆம் சரத்தின்படி மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை வழங்க முடியும் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.*

*அவர் மேலும் கூறுகையில்-*

*இந்தத் தேர்தல் அரசுக்குத் திருப்புமுனை. அரசு மண்ணைக் கவ்வப்போகும் தேர்தல்.*

*அதனால்தான் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு முயற்சி செய்கின்றது. தேர்தலை ஒத்திப்போடுவதற்குப் பல்வேறு வழிகளிலும் அரசு முயற்சி செய்து வருகின்றது. அரசு என்னதான் முயற்சி செய்தாலும் சட்டத்தின் படி தேர்தலை ஒத்திப்போட முடியாது.*

*தேர்தலை ஒத்திப்போட்டால் மக்கள் சும்மா பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள்.*

*பொருளாதார பிரச்னையால் தேர்தலை நடத்த முடியாது என்று கூறினால், அந்தப் பிரச்னைக்குக் காரணம் இந்த அரசுதானே. அப்படியென்றால் தேர்தலில் ஆட்சியை மாற்றுவதன் மூலம்தான் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க முடியும்.*

*பொருளாதாரப் பிரச்னையை ஏற்படுத்தியவர்களால் ஒருபோதும் பிரச்னையைத் தீர்க்க முடியாது. ரணில் ஜனாதிபதியாகி ஏதாவது பிரச்னை தீர்ந்திருக்கின்றதா? பிரச்னை கூடித்தான் இருக்கின்றது.*

*உலகின் ஒவ்வொரு நாடுகளும் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடையும் போது, அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தித்தான் வீழ்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி இருக்கின்றன.*

*தேர்தலுக்கு யாரும் இடையூறு செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அரசமைப்பின் 104ஆம் சரத்தின்படி மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை வழங்க முடியும்.*



*இந்த வருடம் 11 பில்லியன் ரூபாவைத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குவதற்காக பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. நிதி அதிகாரம் இருப்பது பாராளுமன்றிடம்.*

*அந்த நிதியை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குவது நிதி அமைச்சின் செயலாளரின் கடமை. அதை அவரால் மீற முடியாது. அவர் வழங்காமல் இருந்தால் தேர்தலுக்குத் தடை ஏற்படுத்துகின்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதாகுவார்.*

*அப்படியென்றால் அவருக்கு எதிராக அரசமைப்பின் 104 சரத்தின்படி அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும். அவருக்கு மூன்று வருட தண்டனை வழங்க முடியும்.*

*அடுத்த வழக்கு விசாரணையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நிதியை வழங்குமாறு நீதிமன்றம் அவருக்கு உத்தரவிடும் என்று நாம் நம்புகின்றோம்.*

*அதேபோல் உள்விவகார அமைச்சின் செயலாளர் கட்டுப்பணத்தை ஏற்கவேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுதிய கடிதம் தொடர்பிலும் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.*

*அவரும் தேர்தலுக்குத் தடை ஏற்படும் வகையில்தான் செயற்பட்டுள்ளார். அவருக்கும் மூன்று வருட சிறை தண்டனை வழங்க முடியும் - என்றார். (அ)*

# சட்டவிரோத ஆட்கடத்தல் பொறியில் சிக்கியுள்ள இலங்கை பட்டதாரிகள்!

*கொழும்பு, பெப். 09*

*இலங்கையைச் சேர்ந்த பட்டதாரிகள் சட்டவிரோத ஆட்கடத்தல் பொறியில் சிக்கியுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.*

*தென்கிழக்காசியாவின் பாரிய திட்டமிட்ட குற்றச் செயல்களின் மையமாக கருதப்படும் லாவோஸில் இந்த இலங்கைப் பட்டதாரிகள் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*தொழில் வாய்ப்பு பெற்றுக்கொள்ளும் நோக்கில் சென்றுள்ள இலங்கையர்கள் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.*


*தனியொரு தங்குமிடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பட்டதாரிகள் உள்ளிட்டவர்கள் நாள் ஒன்றுக்கு 5 அமெரிக்கப் பிரஜைகளின் தொலைபேசி எண்களை பெற்றுக் கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.*

*அவ்வாறு பெற்றுக் கொள்ளத் தவறுவோருக்கு மின்சார அதிர்ச்சி, 100 புஷ் அப், 100 ஸ்குவாட் போன்ற தண்டனைகள் விதிக்கப்படுவதாக அங்கு சிக்கியுள்ள ஜே என்ற புனை பெயரைக் கொண்டு இலங்கையர் தெரிவித்துள்ளார்.*

*இவ்வாறு தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுக் கொண்டு அமெரிக்கப் பிரஜைகளுடன் நட்புறவாகியதன் பின்னர் அவர்களை ஏமாற்றி அவர்களை சட்டவிரோத செயற்பாடுகளுக்கு முதலீடு செய்யச் செய்து அந்தப் பணத்தை அபகரிப்பதே இந்த கும்பலின் இலக்காக காணப்படுகின்றது.*

*இந்த மோசடி நடவடிக்கைகள் பாரிய அளவில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பூர்வீக சொத்துகளில் இருந்த பிரச்னை தீரும். உங்கள் எண்ணம் நிறைவேறும். முடிவிற்கு வரவேண்டிய ஒரு முயற்சி கடைசி நேரத்தில் தள்ளிப்போகும். எதிர்பார்த்தவற்றில் இழுபறி ஏற்படும்.

**இடபம்**
வம்பு, வழக்குகள் உங்களுக்கு எதிர்மறையான பலன்களை வழங்கும். மகிழ்ச்சியான செயல்களில் ஈடுபடுவீர்கள். அடுத்தவரை நம்பி சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட வேண்டாம்.

**மிதுனம்**
எதிர்பார்த்த வரவு வந்து சேரும். புதிய முயற்சியில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். பொருளாதார நிலையில் உயர்வு உண்டாகும். நண்பர்கள் துணையுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**
வார்த்தைகளில் கவனம் தேவை. பணம், நகைகள் விஷயத்தில் எச்சரிக்கை அவசியம். செயல்களில் நிதானம் அவசியம். குடும்பத்தினரால் சில நெருக்கடிகளுக்கு ஆளாவீர்கள்.

**சிம்மம்**
மனதில் குழப்பம் அதிகரிக்கும். எதைச் செய்வது என்ற முடிவிற்கு வரமுடியாமல் திண்டாடுவீர்கள். மனதில் புதிய எண்ணம் உரு வாகும். தவறான வழியில் பணம் சம்பாதிக்கும் முயற்சி பாதகமாகும்.

**கன்னி**
எதிர்பாராத பயணம் ஏற்படும். செயல்கள் பெரும் முயற்சிக்கு இடையே நிறைவேறும். அத்தியாவசிய செயலில் மட்டும் ஈடுபடுங்கள். பணம் பல வழிகளிலும் செலவாகி இருப்புகள் கரையும்.

**துலாம்**
முயற்சி வெற்றியாகும். அடிப்படைத் தேவைகள் நிறைவேறும். எதிர்பார்த்த வருவாய் உண்டு. நண்பர்களிடம் கவனம் தேவை. பிறருக்கு செய்யும் உதவி உங்களுக்கு சங்கடத்தை உண்டாக்கும்.

**விருட்சிகம்**
வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு**
இருப்பிடத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும். உங்கள் அணுகுமுறையில் மாற்றம் உண்டாகும். எதிரிகளும் உங்களைத் தேடி வந்து சரண் அடைவர்.

**மகரம்**
கவனமுடன் செயல்படவும். முயற்சியில் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாது. முயற்சிகள் இழுபறியாகும். மனதைப் பாதிக்கும் வகையில் இன்று சில சம்பவங்கள் நடக்கலாம்.

**கும்பம்**
பழைய பிரச்னைக்கு முடிவு கட்டுவீர்கள். எதிர்பார்த்த வரவால் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினரிடம் ஏற்பட்ட பகை விலகும். உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் தேடி வருவார்கள்.

**மீனம்**
இன்று கோயிலுக்கு சென்று வருவீர்கள். உடல் நிலையில் இருந்த சங்கடம் விலகும். உங்கள் முயற்சி ஒன்று நிறைவேறும். அத்தியாவசிய தேவைக்காக கடன் வாங்குவீர்கள்.

# இலங்கையிலிருந்து தங்கம் கடத்தல்?

## பொலிஸாரை கண்டதும் கடலில் மூடையை வீசிய கடத்தல்காரர்கள்!

இராமேஸ்வரம், பெப். 09

கடலோர காவல் படையை கடலில் கண்டதும் கடத்தலில் ஈடுபட்டிருந்தவர்கள் மூடை ஒன்றை கடலில் வீசிவிட்டு தப்பிக்க முயன்ற நிலையில் அவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் இருந்து தமிழ் நாட்டுக்கு தங்கம் கடத்தப்படுவதாக மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதன் அடிப்படையில் அவர்கள் இந்திய கடற்படையினருக்கும் தமிழக கடலோர காவல் படை பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, இதையடுத்து நேற்று அதிகாலை 5 மணி முதலே தமிழக கடலோர எல்லை மற்றும் சர்வதேச கடல் எல்லையில் இருந்து இந்திய கடற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு படை அதிகாரிகள் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது இலங்கையில் இருந்து தமிழ் நாடு நோக்கி நாட்டுப் படகு ஒன்று வந்துள்ளது.

அதிகாரிகள் அதனை நிறுத்த முயன்ற போது, அந்த படகு நிற்காமல் சென்றுள்ளது. இதனால் அந்த படகை கடற் படை அதிகாரிகள் துரத்தி சென்று பிடிக்க முயன்றுள்ளனர். அப்போது அந்த படகில் இருந்த நபர்கள் ஒரு மர்ம மூடையை கடலில் வீசிச் சென்றுள்ளனர். தொடர்ந்து அந்த படகை துரத்திப் பிடித்த அதிகாரிகள், அதில் இருந்த நபர் களை கரைக்கு கொண்டு விசார ணை நடத்திய போது அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில ளித்துள்ளனர்.

இதனால் அந்த நபர்கள் கடலில் வீசியது தங்கமா? அல்லது போதைப்பொருளா? என்பதைக் கண்டறிய கடற்படை அதிகாரிகள் கடலில் தீவிர தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றனர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மஞ்சள், போதைப் பொருள் ஆகியவை அதிக அளவில் கடத்தப்படுவதாகவும், இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அதிக அளவில் தங்கம் கடத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. எனவே, கடலில் வீசிய மர்ம மூட்டையை கண்டறிந்த பிறகுதான் அது தங்கமா அல்லது போதைப்பொருளா என்பது தெரியவரும். இந்த சம்பவத்தால் ராமேஸ்வரம் கடலோர பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ஐ)

# கூட்டாட்சி முறை, அரசியலமைப்பை ஆளுநர்களுக்கு கற்பிக்க வேண்டும்!

## கனிமொழி எம். பி. சாடல்

சென்னை, பெப். 09

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 20 தீர்மானங்களுக்கு ஆளுநர் இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை என்று மக்களவையில் தி. மு. க. உறுப்பினர் கனிமொழி குற்றம் சாட்டியுள்ளார். ஆளுநர்களுக்கு அரசியல் சாசனத்தையும், கூட்டாட்சி முறையையும் கற்பிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 3 நாட்களாக முடக்கப்பட்ட பாராளுமன்றம் நேற்று செயல்படத் தொடங்கிய நிலையில், மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய கனிமொழி, "ஒரே நாடு, ஒரே வரி, ஒரே சந்தை, ஒரே கலாசாரத்தை உருவாக்க பா. ஜ. க. நினைக்கிறது. ஆனால், பா. ஜ. க. நினைப்பது ஒருபோதும் நடக்காது. ஒன்றிய அரசு சர்வாதிகார போக்கை நோக்கி நகர்கிறது. இந்தியாவில் வேலையில்லா திண்டாட்டம் அதிகமாகி வருகிறது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 20 மசோதாக்களுக்கு ஆளுநர் இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. ஆளுநர்களுக்கு அரசியல் சாசனத்தையும், கூட்டாட்சி முறையையும் கற்பிக்க வேண்டும். இந்த ஆண்டு தேர்தல் எதுவும் இல்லாததால், குடியரசுத் தலைவர் உரையில் திருக்குறள் இடம்பெறவில்லை.

இந்த நாட்டை தனது கடின உழைப்பால் உருவாக்கும் சாமானிய மக்களுக்கு மத்திய அரசு என்ன பதில் வைத்துள்ளது? மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களை மூடுவதில் மகிழ்ச்சி அடைகிறது. மக்கள் இதனால் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

பிரதமர் மோடி தொடர்ந்து தமிழ் மொழியின் பெருமைகள் குறித்து பேசி வருகிறார். ஆனால், சமஸ்கிருதத்துக்கு 198.83 கோடி ரூபாயும், தமிழ் மொழிக்கு 11.86 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன - என்றார்.

# கலைஞர் நினைவு சின்னம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு

சென்னை, பெப். 09

மெரினா கடலில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நினைவாக பேனா சின்னம் அமைப்பதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு சென்னை மெரினாவில் அவரின் நினைவிடம் அருகே கடலுக்கு உள்ளே பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைக்கும் முயற்சியில் தமிழ்நாடு அரசு இறங்கியுள்ளது.

இதனடிப்படையில் சென்னை மெரினா கடற்கரையில் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி நினைவிடம் அருகே பொதுப்பணித்துறை சார்பில் ரூ. 81 கோடியில் பேனா நினைவுச் சின்னம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பேனா நினைவுச் சின்னம் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், சுனாமி, புயல், நிலநடுக்கம் உள்ளிட்ட பேரிடர்களை முன் கூட்டியே கண்டறியும் கருவிகளுடனும் அமைகிறது எனவும் மும்பையில் அமைக்கப்பட்டு வரும் சத்ரபதி சிவாஜி சிலை கட்டமைப்பை முன்மாதிரியாக கொண்டு அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கருணாநிதி நினைவிடத்தில் இருந்து 360 மீற்றர் தூரத்தில் கடலில் பேனா நினைவுச் சின்னம் அமைக்கப்படுகிறது. அந்த பகுதிக்கு செல்ல கடற்கரையில் இருந்து சுமார் 650 மீற்றர் நீளத்துக்கு கண்ணாடியிலான மேம்பாலம் அமைக்கப்படும். இந்த பாலம் தரையின் மேல் 290 மீற்றரும், கடலின் மீது 360 மீற்றர் தூரம் இருக்கும். இந்த பகுதிக்கு 'கலைஞர் பேனா நினைவுச் சின்னம்' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மெரினா கடலில் பேனா சின்னம் வைப்பதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் சென்னையை சேர்ந்த ஒருவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில், " மக்களின் கருத்தை அறியாமல் இந்த பேனா சின்னம் வைக்கப்படுகிறது. குறிப்பாக மீனவர்களின் கருத்தை அறியாமல் இந்த சின்னத்தை அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. கடலில் இந்த 134 அடி உயரம் கொண்ட நினைவு சின்னம் அமைப்பது என்பது தவறானது, இயற்கை நீதிக்கு எதிரானது.

இந்த நினைவு சின்னம் அமைப்பதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் . இதேபோல் கடலில் அமைக்கப்படும். இதனால் கடல் வளம் பாதிக்கப்படும். அது மீனவர்களுக்கு பாதிப்பை விளைவிக்கும். எனவே இந்த நினைவு சின்னத்தை வேறு இடத்தில் அமைக்க உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ஐ)

# துணிவிருந்தால் தேர்தலை மார்ச் 9ஆம் திகதி நடத்துக!

## அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சவால்



கொழும்பு, பெப். 09

"துணிவு இருந்தால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நடத்திக் காட்டுங்கள்." - இவ்வாறு அரசுக்குப் பகிரங்க சவால் விடுத்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

தேர்தல் நடத்தப் பணம் இல்லை என்றால் அரசு அரச செலவைக் குறைக்க முடியும். மக்கள் இப்போது அனுபவிக்கும் துன்பத்துக்கு மக்கள் காரணமல்ல. அரசின் ஊழல், மோசடிகளே காரணம்.

இந்தநிலையில் நாம் தேர்தலைக் கேட்பது கிராமங்களில் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத்தான். சிறு சிறு தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியும். அதனூடாக அந்த மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப முடியும்.

நாட்டை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை கிராமங்களில் இருந்து ஆரம்பமாக வேண்டும். அதற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேண்டும். கிராமங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

பொருளாதாரத்தை நாசமாக்கியவர்களைப் பழிவாங்குவதற்காக இந்தத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை. கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காகவே இதைப் பயன்படுத்த வேண்டும் என்றே சொல்கின்றேன்.

நல்லவர்களை வேட்பாளர்களாகக் களமிறக்கவேண்டும். கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி கலவரத்தின்போது ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை எரித்தவர்கள் பலர் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக உள்ளார்கள் என்று அரச உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அது பொய்.

வீடுகள் எரிவதைப் பார்த்துக்கொண்டு நின்றவர்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்கள். எம் மீது இருக்கின்ற கோபம் காரணமாக எமது ஆதரவாளர்களும் தீ வைத்தார்கள் என்று அரச தரப்பினர் பொலிஸிடம் கூறினர். அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தீ வைத்தார்கள் என்று நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள் எவரும் எங்களது வேட்பாளர் பட்டியலில் இல்லை - என்றார். (அ)



# மலையக மக்களின் மேம்பாட்டுக்கு அமெரிக்காவின் பங்களிப்பு தேவை

## தூதுவரிடம் கோரினார் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, பெப். 09

மலையகத் தமிழர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு அமெரிக்காவின் பங்களிப்பும் அவசியம். அதற்காக உரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு இலங்கைக் கான அமெரிக்க தூதுவரிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் நேற்று முன் தினம் பேச்சு நடத்தினார்.

நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு அமெரிக்கா வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு மலையக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்த ஜீவன் தொண்டமான், மலையக மக்களின் தற்போதைய நிலைவரம் பற்றியும் எடுத்துரைத்தார்.

அத்துடன், மலையக மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (அ)

# செங்குந்த மீன் சந்தை வியாபாரிகள் 13 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

யாழ்ப்பாணம், பெப். 09

நல்லூர் செங்குந்த மீன் சந்தையில் அங்கீகரிக்கப்படாத, நிறுக்கும் கருவி (தராசை) பயன்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்ட 13 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு மீன்சந்தையில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை



பரிசோதித்தபோது, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்படாத, வியாபாரத்திற்கு பயன்படுத்த முடியாத 13 நிறுக்கும் கருவிகளை வியாபாரிகள் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# அமரகீர்த்தி அத்துகோரள கொலை; சந்தேகநபர் புற்றுநோயால் மரணம்

கொழும்பு, பெப். 09

பொலனறுவை மாவட்ட பொதுஜன பெரமுனவின் எம்.பி. அமரகீர்த்தி அத்துகோரள கடந்த மே மாதம் 9ஆம் திகதி தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ சிப்பாய் மஹறகம அபேக்ஷா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என நிட்டம்புவ தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நிட்டம்புவ எல்லக்கல பிரதேசத்தை சேர்ந்த ஹெந்தவிதாரண நிபுண புத்திக என்ற 26 வயதுடைய முன்னாள் இராணுவ சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் இரகசிய பிரிவு அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் மஹர விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

புற்று நோயினால் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் நிலையில், மஹர சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்தார் என அப்பகுதியின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# 13ஆவது திருத்தம் குறித்து மொட்டு கட்சி முடிவில்லை

கொழும்பு, பெப். 09

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயம் தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி இன்னும் எவ்வித முடிவையும் எடுக்கவில்லை என்று அந்தக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும், தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்விடயம் தொடர்பில் கட்சிக்குள் இருவேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. உதாரணமாக சரத் வீரசேகர போன்றவர்கள் அதனை எதிர்க்கின்றனர். இது தொடர்பில் ஆழமாக ஆராயப்பட்டுவருகின்றது. இன்னும் கட்சி என்ற வகையில் உறுதியான - இறுதியான முடிவை நாம் எடுக்கவில்லை.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு கோட்பாட்டை ஆதரிக்க முடியும். மகிந்த சிந்தனையிலும் இவ்விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. 13 பிளஸ் என்ற கருத்தை மகிந்த ராஜபக்ஷ முன்வைத்தார். அது அனைத்து மாகாண சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான செனட் சபை முறையாகும் - என்றார். (அ)

# மீள்குடியேறிய முஸ்லிம்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை!

## பள்ளிவாசல் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், பெப். 09

வடக்கில் மீள்குடியேறிய முஸ்லிம்களுக்கு முறையான வகையில் வீடமைப்பு திட்டங்கள் வழங்கப்படவில்லை சர்வமத தலைவர்களிடம் பள்ளிவாசல் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வந்த சர்வமதத் தலைவர்களை சந்தித்தபோதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

மேலும், 1990 ஆண்டு முஸ்லிம்களின் வெளியேற்றம் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து 2002 ஆம் தொடக்கம் மீளக்குடியமரத் தொடங்கினார்கள். இவ்வாறு மீளக் டியமர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு முறையான மீள் குடியேற்ற உதவிகள் கிடைக்கவில்லை நாம் இது தொடர்பாக மீள் குடியேற்ற அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைத்து தரப்பினருக்கும் தெரியப்படுத்தி கலந்துரையாடியிருந்தோம் குறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோரிடமும் கலந்துரையாடி மீள் குடியேற்றத்தை இலகுபடுத்துமாறு கோரியிருந்தோம்.

எனினும் எந்த முன்னேற்றமும் இடம்பெறவில்லை. 1990 ஆம் ஆண்டு வெளியேறியபோது 3,500 குடும்பங்களாக இருந்தோம் தற்போது 15 ஆயிரம் குடும்பங்களாக விரிவடைந்துள்ளோம். சுமார் ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ள போதும் இதுவரை சுமார் 250 குடும்பங்களுக்கே வீட்டுத்திட்டம் கிடைத்துள்ளது.

சுமார் 13 ஆண்டுகளாக இடம்பெற்ற மீள்குடியேற்றத்தில் 250 வீடுகள் வழங்கப்பட்டால் ஏனையவர்களுக்கு எத்தனைகாலம் எடுக்கும் என்பதே எமது கேள்வியாகவுள்ளது. எங்களுடைய வீட்டுதிட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் - என்று கூறினர். (ஐ)

# தேசிய மக்கள் சக்தியும் ‘13’ இற்கு முழு ஆதரவு!



## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

**கொழும்பு, பெப். 09**

**இந்த நாட்டில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ளது எனவே, புதிதாக செயல்படுத்த எதுவும் இல்லை என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

ஏற்கனவே தாம் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்திருக்கின்றமையால் மேலும் அது பற்றிப் பேசிப் பேசி வார்த்தைகளை நிரப்பிக் கொள்ள வேண்டிய தேவை இல்லை என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் கம்பஹா மாவட்ட பொதுஜன பெரமுன வழிநடத்தல் குழுவுடன் நேற்று முன்தினம் கொழும்பில் கலந்துரையாடலில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் பற்றி தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். மேலும் அது பற்றிப் பேசிப் பேசி வார்த்தைகளை நிரப்பிக் கொள்ளவேண்டிய தேவை இல்லை. நாங்கள் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்தி அது முடிந்துவிட்டது. புதிதாக நடைமுறைப்படுத்த எதுவும் இல்லை. நான் மாகாண முதலமைச்சர் ஆனதும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் இந்த நாட்டில் செய்படுத்தப்பட்டதானா லாகும்.

ஜே.வி.பி. நாட்டு மக்களை கொன்று நாட்டையே அழித்த கட்சி. நாங்கள் வன்முறையற்ற கட்சி. நாங்கள் மக்களை கொன்ற கட்சி இல்லை. கொரோனா வைரஸிலிருந்து மக்களைக் காப்பாற்ற தடுப்பூசிகளைக் கொடுக்க நம் மக்கள் தலையிட்டனர். கிராமத்தில் வீதிகளை அமைத்துக் கொடுத்த மக்களுக்கு தொழில்களை ஏற்படுத்திக் கொடுத்த நமக்கு மக்களுக்கு மத்தியில் போக முடியாமல் இருப்பது ஏன்?

நாங்கள் நாட்டில் வீதிகளை அமைக்கும்போது 10 வீதம் கொமிஷன் எடுக்கப்படும் என்ற கருத்தை உருவாக்கினார்கள். அதற்கு பயந்து வீதி அமைப்பதை நிறுத்தினர். அது நாட்டின் வளர்ச்சியை நிறுத்தியது. நாங்கள் கட்டிய வீதிகளில் எங்கள் கட்அவுட் வைப்பதை நிறுத்தி விட்டோம். ஆனால் இப்போது ஜே.வி.பி. நாங்கள் அமைத்த வீதிகளில் கட்அவுட்கள் வைத்துள்ளன. இது குறித்து மக்களிடம் பேச வேண்டும். அப்போதுதான் கிராம மக்களுக்கு உண்மை நிலவரம் புரியும்.

அனுரகுமார ஏற்கனவே ஜனாதிபதி உடையை அணிந்துள்ளார். பேஸ்புக்கின் ஜனாதிபதியாகவும் உள்ளார். ஜனாதிபதி என்று நினைத்துக்கொண்டு நடக்கிறார், பேசுகிறார். அவர் கனவு கண்டாலும் அவரால் மக்கள் இதயங்களில் ஜனாதிபதியாக வர முடியாது. அதனாலேயே அநுரகுமாரவை அந்தக் கனவை தொடரச் சொல்லுவோம். கீழ் மட்டத்திற்குப் போய் வேலை செய்து இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவோம்-என்றார். (அ)



# உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்துடன் அரசு ஒப்பந்தம்

கொழும்பு, பெப். 09

இலங்கையின் காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் இலங்கையின் பசுமை வளர்ச்சி அபிவிருத்தியை வலுவூட்டுதல் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக, உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இந்த ஒப்பந்தமானது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகமும் பொதுச்சபையின் தலைவரும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனச் சபையின் தலைவருமான பான் கி மூன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் கைச்சாத்திடப்பட்டது.

அரசாங்கமும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனமும் பசுமை வளர்ச்சி தொடர்பான முயற்சிகள் குறித்த திட்டங்களை திறம்பட வடிவமைப்பதற்கு ஏதுவாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசு சார்பில் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்கவும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனம்அ சார்பாக அதன் பணிப்பாளர் நாயகம் பிராங் றிஜ்ஸ்பெர்மன் ஆகியோரும் கைச்சாத்திட்டனர். (அ)

# மசாஜ் நிலையம் சென்ற பொலிஸார் பணி நீக்கம்!

கொழும்பு, பெப். 09

கடமை நேரத்தின் போது மசாஜ் நிலையத்துக்கு சென்று அங்கு பெண்களின் சேவையைப் பெற்றுக்கொண்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளனர்.

பெலிகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு கான்ஸ்டபிள்களே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் எந்தவித அறிவிப்பும் இன்றி பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேறி மசாஜ் நிலையத்திற்கு சென்றிருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# அத்தியாவசிய செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளை மட்டுமே வழங்குங்கள்

## திறைசேரி செயலாளருக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, பெப். 09

அரச வருமானம் மேம்படும் வரை பொதுச் சேவைகளைப் பேணுவதற்காக அத்தியாவசிய அரச செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளை மட்டுமே வழங்குமாறு திறைசேரி செயலாளருக்கு ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்துள்ளார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

முன்னர் மேற்கொள்ளப்பட்டது போன்று அரசாங்க நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு, மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் தடையாக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அமைச்சரவைக்கு இது குறித்து அறிவித்தார்.

இதன்படி, சம்பளம் வழங்குதல், கடன் சேவைகள், ஓய்வூதியம், வைத்தியசாலை மருத்துவ சேவைகள், மாதாந்த சமுர்த்தி மானியங்கள், முதியோர்களுக்கான நிதியுதவி, ஊனமுற்ற குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிதியுதவி, சிறுநீரக நோயாளிகளுக்கு நிதியுதவி வழங்குதல், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட நிதி உதவி என்பவற்றுக்கு மாத்திரமே நிதியை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், தரம் 05 புலமைப்பரிசில் கொடுப்பனவு, மஹபொல உதவித்தொகை, திரிபோஷ வேலைத்திட்டம், உழவர் ஓய்வூதியம், பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்குத் திட்டம், இராணுவம் மற்றும் ஊனமுற்ற இராணுவத்தினருக்கான கொடுப்பனவு, இராணுவ வீரர்களின் பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவு, ஒத்திவைக்க முடியாத மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் அத்தியாவசிய தொலைத் தொடர்பு சேவைகள், மருத்துவமனைகள், சிறைச்சாலைகள். , இராணுவத்தினருக்கு உணவு வழங்கல், பராமரிப்பு சேவைகள், கட்டிட வாடகை, துப்புரவு சேவைகள், பாதுகாப்பு சேவைகளுக்கான ஒப்பந்தக் கொடுப்பனவுகள், ஊழியர் சேமலாப நிதி போன்ற சட்டப்பூர்வ கொடுப்பனவுகள் மற்றும் உர மானியம் வழங்கல் போன்ற நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (அ)

# கரைச்சி பிரதேச சபை முன்பாக ஒன்றுகூடிய வட்டக்கச்சி மக்கள்!

கிளிநொச்சி, பெப். 09

கிளிநொச்சி வட்டக்கச்சி விநாயகர் வீதியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி மக்கள் பிரதேச சபை முன்பாக கூடினர்.

குறித்த வீதியில் உள்ள 17 குடும்பங்களின் நாளாந்த போக்குவரத்துக்கு குறித்த வீதி உகந்ததாக இல்லை எனவும், 2010 ஆம் ஆண்டு மீள்குடியேறிய காலம் முதல் அவ்வீதியை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க கோரியபோதும், இதுவரை நட வடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வீதியை விஸ்தரிப்பதற்கு 3 காணி உரிமையாளர்கள் தடையாக இருந்த நிலையில், ஒருவர் விட்டுக்கொடுத்ததாகவும், ஏனைய இருவரும் ஒத்துழைக்காத நிலையில், முறையாக விஸ்தரித்து அபிவிருத்திக்கான நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது கரைச்சி பிரதேச சபையினரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

சுமார் 650 மீற்றர் தூரம் மாத்திரமே விஸ்தரிக்கப்படவேண்டி உள்ளதாகவும், ஏனைய பகுதி



புனருத்தாரணம் மாத்திரமே செய்யப்படவேண்டி உள்ளதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

கரைச்சி பிரதே சபைக்கு சொந்தமான குறித்த வீதியை துரிதமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து தவிசாளர் வேழமாலிகிதனிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, காலநிலை சீராக இருந்தால் குறித்த வீதியை எதிர்வரும் வார இறுதி நாட்களில் சீர் செய்து தருவதாக தவிசாளர் தெரிவித்துள்ளார் (அ)

# தொழிற்சங்க போராட்டத்தினால் நேற்று பல துறைகள் ஸ்தம்பிதம்!

## பொதுமக்கள் மிகுந்த சிரமம்

கொழும்பு, பெப். 09

**அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக பல துறைகள் ஸ்தம்பித்தன.**

**சுகாதாரம், கல்வி, துறைமுகம், மின்சாரம், வங்கி உள்ளிட்ட பல் வேறு துறைகளின் தொழிற்சங்க நடவடிக்கைகளால், மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகினர்.**

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட மருத்துவத் துறையை பிரதிநிதித்துவப் படுத்தும் பல தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்றுக் காலை 8 மணி முதல் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்ததால் வைத்தியசாலைகளின் மருத்துவ மற்றும் வெளிநோயாளர் பிரிவுகள் முற்றாக முடங்கின.

எவ்வாறாயினும், நாடளாவிய ரீதியில் உள்ள மகப்பேறு மற்றும் சிறுவர் வைத்திய சாலை கள், புற்றுநோய் வைத்திய சாலைகள், சிறுநீரக சிகிச்சை பிரிவுகள் மற்றும் முப்படை வைத்தியசாலைகளில் இந்த வேலை நிறுத்தம் அமுல் படுத்தப்படவில்லை.

சுகாதாரப் பணிப்புறக்கணிப்பு காரணமாக மருத்துவமனைகளுக்கு வந்த மக்களும் சிரமப்பட்டனர்.

இதேவேளை, புதிய வரி முறைக்கு எதிராக மின்சாரம், நீர், துறைமுகம் மற்றும் எண்ணெய் துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் இன்று சுகயீன விடுமுறையை அறிவிக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

நாடளாவிய ரீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிராந்திய அலுவலகங்கள் நேற்று மூடப்பட்டதாகவும், மின்சாரத் தடைகளை மீளப் பெறுவதற்கான சேவைகள் வழங்கப்படுவதாகவும் இலங்கை மின்சார சபை கூட்டுத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே, நேற்று காலை மின்சார சபையின் பிரதான அலுவலகத்திற்கு முன்பாக வரிக் கொள்கைக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் துறைமுக தொழிற்சங்கங்கள் நேற்று காலை 07 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டன.

இதன் காரணமாக துறைமுகத்தின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்று காலை 10.30 முதல் இலங்கை வங்கி ஊழியர் சங்கம் சேவையை விட்டு விலகி தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளித்தது.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள் சுகயீன விடுமுறை அறிவித்தனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நேற்று தமது கற்பித்த செயற்பாடுகளில் இருந்து விலகினர்.

இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக் கழகங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிராக ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒன்றியத்தினால் இன்று பிற்பகல் கொழும்பு கோட்டை பிரதேசத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியை தடுக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நிராகரித்தது.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களில் ஈடுபடுவதற்கு அரசியலமைப்பின் மூலம் மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளதாக நீதிவான் திலின கமகே தமது தீர்ப்பில் அறிவித்தார்.

எவ்வாறாயினும், வன்முறையில் ஈடுபடும் எந்தவொரு தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாகவும் நீதவான் சுட்டிக்காட்டினார். (அ)

# மக்கள் ஒருபோதும் வீதிக்கு வந்து தேர்தலை நடத்தக் கோரவில்லை!

## இராஜாங்க அமைச்சர் எதிரணிக்கு பதில்



கொழும்பு, பெப். 09

இலங்கையின் இன்றைய நிலைமையில் மக்கள் ஒருபோதும் வீதிக்கு வந்து தேர்தல் கேட்கவில்லை. பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்குமாறே அவர்கள் கூறுகின்றனர் என இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

“துணிவு இருந்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நடத்திக் காட்டுங்கள்“ என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும அரசாங்கத்துக்கு பகிரங்க சவால் விடுத்திருந்தார் .

இதற்குப் பதில் வழங்கும் போதே இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாக்குரிமையை நிலைநாட்டியவர் மகிந்த ராஜபக்ச தான்.

போரை நிறைவு செய்தபின் வடக்கு, கிழக்கில் நடத்தப்படாமல் இருந்த மாகாண சபைத் தேர்தலை நடத்தினார்.

கள்ள வாக்குகள் போடப்பட்ட ஒரு காலம் இருந்தது. தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தி கள்ள வாக்குகள் போடுவதை மகிந்த ராஜபக்ஷ நிறுத்தினார்.

அதனால் தேர்தல் தேவையில்லை என்று சொல்லுவதற்கு நாம் தயாரில்லை.

ஆனால், இன்று இருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமை திரிவுபடுத்தப்பட்ட ஒன்று.

இது பற்றி எவரும் பாராளுமன்றில் பேசுவதில்லை.

ஜே.வி.பி. எல்லாவற்றையும் விமர்சிக்கின்றது. ஒருபோதும் இந்தத் தேர்தல் முறைமை பற்றி ஜே.வி.பி. கூறியது இல்லை.

அவர்களுக்குத் தேவை உறுப்பினர்களின் எண்ணிக்கை

மட்டும்தான். முடிந்தால் ஜே.வி.பி. ஒரு சபையையாவது கைப்பற்றிக் காட்டட்டும்.

மக்கள் ஒருபோதும் வீதிக்கு வந்து தேர்தல் கேட்கவில்லை.

பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்குமாறே அவர்கள் கூறுகின்றனர்.

கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தில் நாட்டை முன்னேற்றுவோம் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய போதிலும் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக அது முடியாமல் போனது.

இதற்கு எதிராக எழுந்த போராட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தடுக்கப்பட்டது-என்றார். (அ)

# காதலை எதிர்த்த சகோதரனை வெட்டிக் கொன்ற சிறுவன் கைது!

கொழும்பு, பெப். 09

கூரிய ஆயுதத்தால் தாக்கி தனது மூத்த சகோதரனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 14 வயதுடைய சிறுவனை களுத்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேக்கவத்தை - பலாதொட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தந்தையை பார்ப்பதற்காக தாய் சென்றிருந்த வேளையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 26 வயதுடைய இளைஞரொருவரே கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் காலை குறித்த சிறுவனின் காதல் விவகாரம் தொடர்பில் இவர்களுக்கிடையில் வாக்குவாதமொன்று இடம்பெற்றுள்ளது. காதல் தொடர்பை துண்டிக்குமாறு மூத்த சகோதரன், சந்தேகநபரான இளைய சகோதரனை வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது வாக்குவாதம் முற்றியதையடுத்து 26 வயதான சகோதரன், பாடசாலை மாணவனான தமது சகோதரனை தாக்கிவிட்டு உறங்கச் சென்றுள்ளார்.

அதன்போது, சந்தேக நபரான சிறுவன், உறக்கத்தில் இருந்த தமது மூத்த சகோதரனை கூரிய ஆயுதத்தினால் கழுத்து பகுதியில் வெட்டிக் கொலை செய்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

9ஆம் தரத்தில் கல்வி கற்கும் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் சட்ட வைத்திய பரிசோதனைக்காக முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவர் தற்போது களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (அ)

# மன்னாரில் உள்ள அரச, தனியார் வங்கி ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்



மன்னார், பெப். 09

அரசாங்கத்தின் புதிய வரி கொள்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் நேற்று புதன் கிழமை கவனயீர்ப்புப் போராட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்தனர்.

அதன் ஒரு பகுதியாக மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 9 வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் பிரதான சுற்றுவட்ட பகுதியில் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் முன்னெடுத்தனர்.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள வரியானது 6 வீதம் தொடக்கம் 36 வீதமாக உள்ள நிலையில் அதை 6 வீதம் தொடக்கம் 24 வீதமாக குறைக்க கோரியும் வரி அறவிடும் சம்பள எல்லையை ஒரு லட்சம் தொடக்கம் இரண்டு லட்சம் வரை மட்டுப்படுத்தி வரி அறவிடுமாறு கோரியும் வங்கி ஊழியர்கள் போராட்டத்தை மேற்கொண்டனர்.

வானுயரும் பணவீக்கம் தொழில் வல்லுநர்கள் நடுவீதியில், நண்பர்களுக்கு வரி சலுகை தொழில் வல்லுநர்களுக்கு வரிச் சுமை, நியாயமான வரி வேண்டும், நியாயமற்ற வரி சுமை வேண்டாம் போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு வங்கி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# அரச ஊழியர்களுக்கான சலுகைகளுக்கு வரி விலக்கு

கொழும்பு, பெப். 09

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சில பணமல்லா சலுகைகளுக்கு, உழைக்கும் போது செலுத்தும் புதிய வரி முறைமையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செ லாளரின் பணிப்புரையின் பேரில் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, ஊழியர்களுக்கு பணமல்லா சலுகைகளாக வழங்கப்படும் வாகனம், எரி பொருள் கொடுப்பனவு, வீடு, மருத்துவ வசதிகள் போன்ற வற்று இவ்வாறு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

# துருக்கி - சிரியா நிலநடுக்கம்:

# "இடிபாடுகளில் குரல் கேட்கிறது, காப்பாற்ற யாரும் இல்லை"



தென்கிழக்கு துருக்கியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் உயிர் பிழைத்தவர்களை மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், அங்கு நிலவும் கனமழை மற்றும் பனிப்பொழிவு காரணமாக மீட்புப்பணி பாதிக்கப்பட்டுள்ளது.

திங்கள் கிழமை அதிகாலையில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் துருக்கி மற்றும் சிரியா எல்லையில் 4,300க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். 15,000க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் உடல்களை மீட்புக்குழுவினர் இன்னும் கண்டெடுத்து வருவதால், பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என உலக சுகாதார மையம் எச்சரித்துள்ளது.

பேரிடர் ஏற்பட்ட பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் கட்டடங்களுக்குள் செல்வதற்கே அஞ்சிக் கொண்டிருக்கின்றனர்.





திங்கள் கிழமை அதிகாலை 4:17 மணியளவில் துருக்கியின் காசியன்டெப் நகரில் 7.8 ரிக்டர் அளவில், 17.9 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு அமைப்பான யு.எஸ். ஜியாலஜிக்கல் சர்வே தெரிவித்துள்ளது.

துருக்கியில் இதுவரை ஏற்பட்ட நிலநடுக்கங்களில் மிக மோசமான நிலநடுக்கம் இது என நிலநடுக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது வரை துருக்கியில் குறைந்தது 2,291 பேர் இந்த நிலநடுக்கத்தால் பலியாகியுள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அதிர்வு சுமார் 2 நிமிடங்கள் நீடித்ததாக, அதில் உயிர் பிழைத்தவர்கள் கூறியுள்ளனர்.

துருக்கியின் காரமன்மராஸ் மாகாணத்தில் உள்ள எல்பிஸ்டான் மாவட்டத்தில் திங்கள்கிழமை 7.5 ரிக்டர் அளவில் மற்றொரு நிலநடுக்கம் பதிவானது.

நிலநடுக்கத்தால் யாரேனும் உயிர் பிழைத்துள்ளனரா என இடிபாடுகளுக்கிடையே தங்களின் வெறும் கைகளால் தோண்டி மீட்புப்பணியில் மீட்புக்குழுவினர் சிலர் ஈடுபட்டனர்.

நிலநடுக்கம் ஏற்பட்ட மையப்பகுதிக்கு அருகே அமைந்துள்ள ஒஸ்மானியே நகரில் கனமழை காரணமாக தேடுதல் பணி தடைபட்டது.

கடும் குளிர் மற்றும் மழைக்கு நடுவே அந்நகரில் மின்தடையும் ஏற்பட்டுள்ளது.

உறையும் குளிருக்கு நடுவே சாலையில் முகாம் அமைத்துத் தங்கியுள்ள நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பம், மீண்டும் கட்டடத்திற்குள் செல்லவே அஞ்சிக் கொண்டிருக்கின்றனர்.

நிலநடுக்கத்திற்குப் பிறகு ஏற்படும் சிறிய அளவிலான நில அதிர்ச்சியின் போது, அந்தக் குடும்பத்தினர் அச்சத்தின் காரணமாக சாலைக்கு நடுவே சென்றுவிடுகின்றனர்.

தங்கள் உணவகத்தில் தங்கியிருந்த 14 பேரில் ஏழு பேர் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளதாக, உணவக உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

மீட்புப் பணிகளுக்காக சிறப்பு குழுக்கள், மோப்ப நாய்கள், உபகரணங்களை வழங்கி உலக நாடுகள் ஆதரவுக்கரம் நீட்டி வருகின்றன.

ஆனால், துருக்கியில் உள்ள மூன்று விமான நிலையங்களும் குறிப்பிடத்தக்க அளவு பாதிக்கப்பட்டுள்ளதால், இத்தகைய உதவிகள் வந்து சேர்வதில் சவால்கள் ஏற்பட்டுள்ளன.

வடக்கு சிரியாவில் இந்த நிலநடுக்கத்தால் குறைந்தது 1,400 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்தப் பகுதியில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான சிரியா அகதிகள் முகாம்களில் தங்கியிருந்தனர்.

இந்தப் பகுதியின் கட்டுப்பாடு சிரியா அரசாங்கம், குர்திஷ் படையினர், மற்ற புரட்சிக் குழுக்கள் என மூன்று தரப்பிடமும் உள்ளது. நிலநடுக்கத்திற்கு முன்பிருந்தே, உறைய வைக்கும் குளிர், காலரா தொற்று நோய், மோசமான உள்கட்டமைப்பு ஆகியவற்றால் சிரியா அகதிகள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட அச்சத்தால் தங்களால் எங்கும் செல்ல முடியவில்லை என, அலெப்போ நகரைச் சேர்ந்த குடியிருப்புவாசிகள் ராய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் தெரிவித்தனர்.

ஜண்டைரிஸ் பகுதியைச் சேர்ந்த ஒருவர், தன் குடும்பத்தினர் 12 பேர் இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்ததாக, ஏ.எஃப்.பி செய்தி முகமையிடம் தெரிவித்தார். தன்னுடைய குடும்பத்தினர் இடிபாடுகளுக்கிடையே சிக்கியிருப்பதாக, மற்றொரு நபர் தெரிவித்தார்.

'அவர்களின் குரல் கேட்கிறது. அவர்கள் உயிருடன் தான் இருக்கிறார்கள். ஆனால், காப்பாற்ற யாரும் இல்லை" என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு சிரியாவின் இட்லிப்பில் அமைந்துள்ள அல்-ஷிஃபா மருத்துவமனையில் கடந்த ஏழு ஆண்டுகளாகப் பணியாற்றியவர் பிரிட்டனை சேர்ந்த ஷஜூல் இஸ்லாம். பிபிசி ரேடியோ 4-இன் 'தி வேர்ல்ட் டுநைட்' நிகழ்ச்சியில் பேசிய அவர், தங்கள் மருத்துவமனை மிக மோசமான மரணங்களை இந்த நிலநடுக்கத்தால் சந்தித்துள்ளதாகத் தெரிவித்தார்.

'எங்கள் மருத்துவமனை நிரம்பியுள்ளது. சுமார் 300-400 பேர் தற்போது எங்கள் மருத்துவமனையில் உள்ளனர். ஒரு படுக்கைக்கு இரண்டு முதல் மூன்று பேர் உள்ளனர்," எனத் தெரிவித்தார்.

மிகவும் கவலைக்கிடமான நிலையில் உள்ள 40-45 பேரை, தான் ஐசியூவுக்கு அழைத்துச் சென்றதாக அவர் தெரிவித்தார். 'மற்றவர்களிடமிருந்து வென்டிலேட்டரை அகற்றி, உயிர் பிழைக்க அதிக வாய்ப்புள்ளவர்களுக்குப் பொருத்துகிறோம். மருத்துவமனையின் நுழைவு வாயிலில் இருந்துகொண்டு யாரைக் காப்பாற்ற முடியும் என்பது குறித்து முடிவு செய்கிறோம்," எனத் தெரிவித்தார்.

சர்வதேச உதவிக்காக வேண்டுகோள் விடுத்த நிலையில், 45 நாடுகள் உதவி செய்ய முன்வந்துள்ளதாக, துருக்கி அதிபர் ரிசெப் தையிப் எர்டோகன் தெரிவித்தார்.

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குத்தேரஸ் சர்வதேச உதவிக்காக அழைப்பு விடுத்தார். பேரழிவால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் 'ஏற்கெனவே உதவியை அணுகுவதில் சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், அப்பகுதிகளில் மனிதாபிமான உதவி தேவை," என்று அவர் தெரிவித்தார்.

துருக்கிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களை அனுப்பியுள்ளது. மேலும், நெதர்லாந்து மற்றும் ரொமானியாவை சேர்ந்த மீட்புக்குழுவினர் துருக்கிக்கு செல்கின்றனர். 76 பேர் அடங்கிய சிறப்புக்குழு, உபகரணங்கள், மீட்பு நாய்கள் உள்ளிட்டவற்றை அனுப்புவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ், ஜெர்மனி, இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் உதவி செய்வதாக அறிவித்துள்ளனர். ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின், துருக்கி மற்றும் சிரியா ஆகிய இரு நாடுகளுக்கும் உதவுவதாக அறிவித்துள்ளார். அவ்வாறே ஈரானும் தெரிவித்துள்ளது.

உலகத்தில் நிலநடுக்கம் அதிகமாக ஏற்படும் நாடுகளுள் ஒன்று துருக்கி. அந்நாட்டின் வட-மேற்குப் பகுதியில் 1999 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 17,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அதேபோன்று, கிழக்கு மாகாணமான எர்ஸின்கன் பகுதியில் 1939ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 33,000 பேர் கொல்லப்பட்டனர்.

தற்போது ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் சைப்ரஸ், லெபனான் மற்றும் இஸ்ரேல் வரை உணரும் வகையில் மிக மோசமானது.





# 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல்

## சில சிந்தனைகள்...



கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன

“13வது திருத்த அடிப்படையில் அரச காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான தேசிய கொள்கை உருவாக்குவதற்குப் பொறுப்பான தேசிய காணி ஆணையத்தை அரசாங்கம் நிறுவுதல் வேண்டும். இந்த ஆணைக்குழுவில் அனைத்து மாகாணசபைகளினதும் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்படுவர். காணி ஆணையம் சகல மாகாணசபைகளினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கும் விதத்திலான தொழில்நுட்ப பொறிமுறைகளைக் கொண்டிருக்கும். இயற்கை வளங்களை மேம்படுத்தும் வகையிலான சமூக பொருளாதாரக் காரணிகளை மதிப்பீடு செய்வதற்குத் தொடர்புடைய துறைகள், தேசிய கொள்கை வகுப்பு, நிலம், அதன் பயன்பாடு போன்றவை தொடர்பான தொழில்நுட்ப அம்சங்களையும் உள்ளடக்கிய செயலகத்தையும் அது கொண்டிருக்கும். ஆனால், இவற்றில் அரசியல் அல்லது இனவாத அம்சங்கள் எதுவும் இருக்க மாட்டா.”

13ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் விளிம்பு நிலை நிர்வாகங்களுக்கு அதிகார பகிர்வினை அறிமுகப்படுத்தியது. இவ்வாறான செயற்பாடு, அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தன் அவசியம் குறித்த விவாதங்களே மீண்டும் செய்திகளாக வெளிவருகின்றன. ஜனாதிபதி விக்கிரமசிங்க முதலில் விவாதங்களை ஆரம்பித்தார். பல்வேறு தரப்பினரிடமும் 13ஆவது திருத்தத்தினை மேலும் முன்னேற்றும் வகையிலான மாற்றங்கள் அவசியமா? அதாவது, 13 பிளஸ் குறித்து வினவினார். அப்போது, அதிகார பரவலாக்கத்தினை ஆதரிப்பவரான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியைச் சார்ந்த லக்ஷ்மன் கிரியெல தமது கட்சி அதனை ஆதரிப்பதாகக் கூறிய அதேவேளை, ஜனாதிபதியின் சட்டவாக்க நிகழ்ச்சி நிரலுக்குத் தேவையான நாடாளுமன்றப் பெரும்பான்மையை மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான பொதுஜன பெரமுன வழங்குமா? என ஜனாதிபதியிடம் வினவினார். இவ்வாறாக, ஜனாதிபதி மற்றும் கிரியெல்ல அழுத்தங்கள் கொடுத்த போது 13ஆவது திருத்தத்தினை மேலும் மேம்படுத்துவதாக இந்தியாவுக்கு உறுதியளித்த மகிந்த ராஜபக்ஸ, மிகவும் தயக்கத்துடன் எழுந்து ‘13 பிளஸ்’ என்றார்.

தேசியப் பிரச்னைக்கான அரசியலமைப்புத் தீர்வொன்றில் ஒருமித்த கருத்தைப் பெறுவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க மேற்கொண்ட முயற்சி சாத்தியப்படவில்லை. பொதுஜன பெரமுனவினர் தமது சிங்கள தேசியவாத தளத்திலிருந்து இறங்கி வரத் தயாராக இல்லை. ஒரு நீண்டகாலத் தீர்வுக்கான வாய்ப்புகள் சாத்தியமில்லை என உணர்ந்த ஜனாதிபதி, பொதுஜன பெரமுனவின் ஆதரவைத் திரட்டும் நோக்கில் 13ஆவது திருத்தத்தினை முழுமையாக அல்லது சிறிய மாற்றங்களுடன் அமுல்படுத்தும் வகையில் தனது உத்தியை மாற்றியுள்ளார்.

அனைத்து கட்சித் தலைவர்களின் மாநாட்டின் முன்னைய கூட்டங்களில் கலந்துகொண்ட பல எதிர்க் கட்சிகள் ஜனவரி 27ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் தவிர்த்தன. ஐக்கிய மக்கள் கட்சியினர் இக் கூட்டம் வெறும் ‘பேச்சு நிகழ்ச்சி’ எனத் தெரிவித்தது. அதன் கூட்டிலுள்ள இன்னொரு, கட்சி மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதி எதனையும் கருத்தில் கொள்ளவில்லை என தமிழர் முற்போக்கு கூட்டணியினர் தெரிவித்தனர். ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள இன்னொரு முஸ்லீம் கட்சியினர் அதில் கலந்து கொண்டனர். தேசிய மக்கள் சக்தி கட்சியினர் அதற்கு ஆதரவளித்தாலும், கொள்கை அளவில் 13ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பான ஜனாதிபதியின் அறிக்கை நம்பத் தகுந்ததாக இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூர்ய தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தப்படாத பகுதிகள், சட்டம், ஒழுங்கு (பொலிஸ் அதிகாரங்கள்) மற்றும் காணி போன்றவற்றை இணைக்க கடந்த 35 வருடங்களாகச் செயற்பட்ட அரசாங்கங்கள், மாகாணசபைகளுக்கு உரித்தான பல பகுதிகள் மற்றும் செயற்பாடுகளை மீளப் பெற்றுள்ளன. அவற்றில் விவசாய சேவைகள் ஒன்றாகும். 2013ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட ‘திவிநெகும’ சட்டமானது, அரசிடமிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி கிராமிய அபிவிருத்தி தொடர்பான பல செயற்பாடுகள் மீளப் பொறுப்பேற்கப்பட்டதால் மத்திய அரசின் ஊடுருவல் என்பது அதன் உச்சமாக அமைந்தது.

### அரசியலமைப்பு மற்றும் சட்ட மாற்றங்கள்

தேசிய காணி ஆணைக்குழு உருவாக்கப்படுவதன் அவசியத்தை ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இது, 13ஆவது திருத்த அமுலாக்கத்திற்குத் தேவையானதாகும். ஆனால், தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் அதனை மேற்கொள்ளவில்லை. மாகாண பொலிஸ் ஆணைக் குழுக்களைத் தொடர்வதா? அல்லது, மாகாண பொலிசாரை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின்கீழ் கொண்டுவருவதா? என்பது சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவருவதாயின் அவ்வாறான முயற்சி அதிகாரத்தை மையப்படுத்துவதாகவே அமையும். அது, ‘13 மைனஸ்’ என்றே கருதவேண்டும். இது, அதிகார பகிர்வுக்கு ஆதரவான சக்திகளுக்கு ஏமாற்றத்தையே ஏற்படுத்தும்.

13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது தேசிய பொலிஸ் ஆணைக்குழு இருக்கவில்லை. பொலிஸ் சேவையிலிருந்தவர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள் போன்றன பொதுச் சேவை ஆணைக்குழுவினால் கையாளப்பட்டன. பொதுச் சேவை ஆணைக்குழுவின் முடிவுகளை ரத்துச் செய்யும் அதிகாரம் அமைச்சரவைக்கு உள்ளது. 13ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களை அமைப்பதற்கு, 1990ஆம் ஆண்டின் பொலிஸ் ஆணைக் குழுச் சட்டம் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண பொலிஸ் ஆணைக்குழுவில் பிரதிப் பொலீஸ் மா அதிபர், பொதுச் சேவை ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒருவர், ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து முதலமைச்சரால் நியமனம் பெற்றவர் ஆகியோர் அடங்குவர். 13ஆவது திருத்தம் முதல் 17ஆவது, 19ஆவது திருத்தங்களின் மூலம் ஒரு தேசிய பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதும் இப்போது அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதி அதன் உறுப்பினர்களை நியமிக்கிறார். இந்த மாற்றங்கள் மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களிலும் பிரதிபலிக்கப்பட வேண்டும் என இக் கட்டுரையாளர் கருதுகிறார்.

மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முதலமைச்சரால் கூட்டாக வழங்கப்பட்ட நியமனங்களைப் பரிசீலித்து அரசியலமைப்பு சபையால் பரிந்துரைக்கப்படவேண்டும் என, கடந்த நாடாளுமன்றத்தின் அரசியலமைப்புப் பேரவையின் சட்டம் மற்றும் ஒழுங்குக்கான உப குழு பரிந்துரைத்துள்ளது. அத்துடன், அந்தந்த மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் ஆளுநரால் நியமிக்கப்படும் மாகாண பொலிஸ் ஆணைக்குழு ஒரு சிறந்த வழிமுறை என்பதையும் இக் கட்டுரையாளர் சமர்ப்பிக்கின்றார்.

13ஆவது திருத்தத்தின் பிரகாரம் அரச காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான கொள்கையை உருவாக்குவதற்குப் பொறுப்பான தேசிய காணி ஆணையத்தை அரசாங்கம் நிறுவவேண்டும். இந்த ஆணைக்குழுவில் அனைத்து மாகாண சபைகளின் பிரதிநிதிகளும் உள்ளடங்குவர். இயற்கை வள மேலாண்மைக்கும் மற்றும் சமூக-பொருளாதார காரணிகளை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான அனைத்து தொடர்புடைய துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்நுட்ப செயலகத்தை ஆணையம் கொண்டிருக்கும். தேசியக் கொள்கை, காணி, பயன்பாடு பற்றிய தொழில்நுட்ப அம்சங்களைக் கொண்டிருக்கும். ஆனால், அரசியல் மற்றும் இனவாத அம்சங்கள் அங்கு இருக்கமாட்டா. மண், காலநிலை, மழைவீழ்ச்சி, மண் அரிப்பு, வன வளர்ப்பு, சுற்றுச் சூழல் காரணிகள், பொருளாதார வாய்ப்புகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு நிலத்தின் பயன்பாடு தொடர்பான பொதுவான விதிமுறைகளை ஆணையம் வகுக்கும். மாகாண சபைகள் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது தேசிய காணி ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட தேசிய கொள்கையை உரிய முறையில் மதித்தல் வேண்டும். தேசிய காணி ஆணையத்தின் அமைப்பு முதலியவற்றை அரசியல் யாப்பு கொண்டிருக்கவில்லை. எனவே, ஆணைக்குழு அமைப்பது சாதாரண சட்டமாக அமைதல் வேண்டும்.

### பரந்த ஒருமித்த பார்வை

ஜனாதிபதி விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ மற்றும் அவருக்கு அருகில் அமர்ந்திருந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் 13ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத் துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சர்வ கட்சி சபையில் தெரிவித்தனர். ஜனாதிபதி விக்கிரமசிங்க நம்பிக்கையுடன் தெரிவிப்பதுபோல், அவரது முயற்சிகளுக்கு அமைச்சரவை யின் ஆதரவும், பொதுஜன பெரமுனவின் ஆதரவும் இருந்தால் 13ஆவது திருத்தத் தினை முழுமையாக அமுல்படுத்துவது நிச்சயமாகச் சாத்தியமாகும். ஆனால், இப்பிரச்னையில் எதிர்க் கட்சிகளையும் ஜனாதிபதி அணுகுவது அவசியம். ஐக்கிய மக்கள் சக்தியினர் அதிகார பகிர்வைத் தேசிய பிரச்னைக்குத் தீர்வாக கருதுகின்றனர். சஜித் பிரேமதாஸவின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத இலங்கைக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வினை உறுதியளித்தது. 1994இல் பிரேமதாஸ தமிழ், முஸ்லீம் மற்றும் மலையக தமிழர் அதிகமுள்ள பகுதிக ளில் அதிக ஆதர வைப் பெற்றிருந்தார். 1994இல் ஜனாதிபதி குமாரதுங்க பெற்ற ஆதரவுக்கு அடுத்தபடியாக அதிக சதவீ தத்தில் அவர்களின் வாக்குளைப் பெற்றதோடு, முஸ்லீம் மற்றும் மலையக மக்கள் அதிகார பகிர்வினை ஆதரிக்கின்றனர். ஆனால், ஜனாதிபதி இம் மக்களைப் பாதிக்கும் அம்சங்கள் குறித்து அவர்களுடன் பேசவேண்டும்.

புதிய ‘ஹெலிகொப்டர்’ கூட்டணியால் 13ஆவது திருத்தம் குறித்து ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க முடியவில்லை. சந்திரிகாவின் அதிகார பகிர்வு பிரச்சாரத்தில் டலஸ், டிலான் பெரேரா ஆகியோர் முன்னணியில் செயற்பட்டனர். பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அவரது அதிகாரப் பகிர்வு முன்மொழிவுகளின் வடிவமைப்பாளராக இருந்தார். திஸ்ஸ விதாரண சர்வ கட்சி மாநாட்டின் செயல்முறை மூலம் தேசிய பிரச்னையில் ஒருமித்த கருத்தைப் பெறுவதில் பாராட்டத்தக்க பணி புரிந்தார். ‘உத்தர சபை’ இலுள்ள இடதுசாரிகள் அதிகார பகிர்வினை வலுவாக ஆதரிப்பவர்களாவர். அதேசமயம் அவர்களின் தேசியவாதக் கூட்டாளிகள் அதற்கு எதிராக உள்ளனர். முன்னாள் ஜனாதிபதி சிறிசேன சர்வகட்சி கூட்டத்தில் 13ஆவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்த ஆதரவு தெரிவித்துப் பேசினார். ஜே. வி. பி. மற்றும் என் பி. பி. இனர் 13ஆவது திருத்த அமுலாக்கல் முயற்சிகளை எதிர்ப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

13ஆவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நோக்கங்களை இலகுவாக நடைமுறைப்படுத்த முடியும் என இலகுவில் கருதமுடியாது. சிங்கள தேசியவாதிகள், ‘உத்தர சபை’ இன் சக்திகள் 13ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிராக ஏற்கெனவே போர் முழக்கத்தை ஆரம்பித்துள்ளனர். மேலும், ஏனைய அனைத்து பொதுஜன பெரமுன கூறுகளும் முன்மொழியப்பட்ட மாற்றங்களை ஆதரிப்பதில் ஆர்வமாக இல்லை. அவர்களுடன் நாடாளுமன்றத்திற்கு வெளியே சிங்கள தீவிரவாதிகளும் இணைந்துகொள்வது உறுதி. 13ஆவது திருத்தத்திற்கு எதிரான சக்திகள் நாட்டில் நிலவும் பொருளாதாரச் சீர்கேடுகளைக் காரணமாகவைத்து மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்த முயற்சிக்கும் இச் சூழலில், தற்போதைய முயற்சியின் உண்மைத் தன்மையையும் அதற்கான வாய்ப்புகளையும் அரசாங்கம் மக்களுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் உணர்த்தவேண்டும். தீவிரவாதிகள் ‘பிரிவினைவாத’ கருத்துக்களை உயர்த்த இடமளிக்காமல் இருக்க ஜனாதிபதி விக்கிரமசிங்கவும், அரசாங்கமும் இவ் விவாதங்களுக்கு நேராக முகம்கொடுத்துப் பதிலளிக்க வேண்டும். காளையை அடக்க வேண்டுமாயின் அதன் கொம்புகளைப் பற்றிக் கொள்ளவேண்டும். அதிகார பரவலாக்கத்தின் மூலம் அதிகாரப் பகிர்வின் அவசியம் குறித்த விபரங்களை மக்களுக்கு வழங்கவேண்டும். இது, இனப்பிரச்னைக்கான தீர்வு மட்டுமல்ல, விளிம்பு நிலை நிர்வாகங்களின் வளர்ச்சிக்கும் அவசியம். தற்போது காணப்படும் சக்திகளின் உள்ளிணைவை அவதானிக்கும்போது, தற்போதைய அரசாங்கத்தால் தன்னிச்சையாக அதனைச் செய்யமுடியாது. எனவே, பரந்த ஒருமித்த கருத்தை உருவாக்குதல் அவசியமாகும்.

(தமிழில்: வி. சிவலிங்கம்)

# ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை நிகழ்வை புறக்கணித்தன எதிர்க்கட்சிகள்!

கொழும்பு, பெப். 09

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வை பிரதான எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான தரப்பினரும் விமல் வீரவன்ஸ தரப்பினரும் இந்த நிகழ்வை புறக்கணித்திருந்தனர்.

இதேவேளை நேற்றைய சம்பிரதாய நிகழ்வில் அனுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் கலந்துகொள்ளவில்லை.

இருப்பினும் சில எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துமிந்த சில்வாவுக்கான பொது மன்னிப்பை இரத்து செய்யுமாறு ஹிருணிகா கோரிக்கை

கொழும்பு, பெப். 09

அரசியலமைப்பின் 34 (1) சரத்தின் ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை பின்பற்றாமைக் காரணமாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த

சில்வாவுக்கான, ஜனாதிபதியின் பொது மன்னிப்பை இரத்து செய்யுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் அவரது தாயார் சுமனா

பிரேமச்சந்திர ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் தமது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பின் சட்டபூர்வமான தன்மையை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பில் வாய்மூலமாக சமர்ப்பணங்களை சமர்ப்பித்தபோது,

ஹிருணிகா பிரேமச்சந்திர



சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சுமனா பிரேமச்சந்திர சார்பில் ஆஜரான சட்டத்தரணி எராஜ் டி சில்வாவும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அரசியலமைப்பின் 43ஆம் சரத்தின் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு விசாரணை நீதிபதிகளின் அறிக்கை, சட்டமா அதிபரின் கருத்து மற்றும் நீதியமைச்சரின்

பரிந்துரையை கருத்தில் கொண்டு துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்படவில்லை என சட்டத்தரணி எராஜ் டி சில்வா நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்செயல்களில் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்தாலோசிக்காத காரணத்தினால்

இயற்கை நீதிக்கு முரணாக ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக நீதிமன்றில்

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றுமொரு மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரத்தினம்,

துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு நியாயமற்றது, தன்னிச்சையானது, சட்டத்தின் ஆட்சியை சீர்குலைக்கும் மற்றும் நீதி நிர்வாகம் மீதான மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்யும் என்று கூறினார்.

இந்த சமர்ப்பணங்களை அடுத்து மனுக்களை எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி வாதத்திற்கு எடுத்துக் கொள்வதாக உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் தீர்மானித்துள்ளது. (அ)

# ஆட்சியை நடத்தும் திறன் எதிரணிகளுக்கு இல்லை

## ஜானக வகும்புர கூறுகிறார்

கொழும்பு, பெப். 09

தற்போதைய பாராளுமன்றத்தில் எதிரணி வரிசையில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் எந்தவொரு கட்சிக்கும் ஆட்சியைக் கொண்டு நடத்தும் திறமை இல்லை என இராஜாங்க அமைச்சரும், மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான ஜானக வகும்புர தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் வைத்து இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாம் ஒத்திப்போடுவதாகக் கூறவில்லை.

ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றும் ஆசை இந்த தேர்தலை நடத்த வேண்டும் என்று கூறுபவர்கள் நிச்சயமாகத் தேர்தல்

நடத்தப்படவேண்டும் என்று விரும்பாதவர்கள். அவர்களால் வெல்ல முடியாது. தோல்விப் பயம் காரணமாகவே அவர்கள் உளறுகின்றார்கள்.

அவர்கள்தான் ஆட்சியைக் கைப்பற்றும் ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றும் ஆசையுடன் இருப்பவர்கள்.

முடிந்தால் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 50.1 வீத வாக்குகளை எடுத்துக் காட்டட்டும் என்று சவால் விடுக்கின்றேன் - என்றார். (அ)

# புற்றுநோய்க்கான 43 வகையான மருந்துப்பொருள்கள் இறக்குமதி

கொழும்பு, பெப். 09

பற்றாக்குறையாக காணப்பட்ட புற்றுநோய்க்கான 43 வகையான மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள இந்த மருந்துப் பொருட்களை சுங்கப் பிரிவினர் தற்போது சோதனைக்கு உட்படுத்தி வருவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் இந்த மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதனிடையே, நாட்டில் தட்டுப்பாடாகவுள்ள 140 வகையான மருந்துப் பொருட்களுக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவற்றை இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## கல்வி tv CHANNEL-1

**09.02.2023**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**09.02.2023**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கு நோக்கிய பேரணிக்கு தேசிய கொடி காட்டிய நபர்கள்

## ஏறாவூர் பகுதியில் நேற்று முன்தினம் சம்பவம்



**மட்டக்களப்பு, பெப். 09**

**வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய உரிமைப் பேரணிக்கு சில நபர்கள் தேசியக் கொடியை காட்டியுள்ளனர்.**

'தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்து' என்ற தொனிப் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகிய வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணி இறுதி நாளான நேற்று முன்தினம் ஏறாவூர் நகர் பகுதியில் சென்ற போது இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

பேரணியில் பங்குபற்றியோர் மஞ்சள் - சிவப்பு கொடிகளுடன் ஏறாவூர் நகர் பகுதியை கடந்த போது, வீதியோரம் நின்ற சிலர் தேசியகொடியை காட்டியுள்ளனர்.

ஏறாவூர் நகரில் பொலிஸ் பாதுகாப்பும் அதிகரித்து காணப்பட்டது. (அ)

# காரைதீவு வைத்தியசாலைக்கு கனடாவிலிருந்து மருந்து உதவி

அம்பாறை, பெப். 09

கனடா காரைதீவு மக் கள் ஒன் றியம் 5லட்ச ரூபா பெறுமதி யான மருந்து பொருட்கள் மற்றும் போட்டோ பிரதி எடுக் கும் இயந்திரத்தை வைத்திய கலாநிதி அ. வரதராசா வின் ஒழுங்கமைப்பில் கடந்த திங்கட்கிழமை காரைதீவு பிரதேச வைத்தி யசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.



இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ பொருட்களையும் 3 லட்ச ரூபாய் பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரமும் கையளிக்கப்பட் டன.

இவற்றை கையளிக்கும் வைபவம் காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் காரைதீவு பிரதேச வைத்தியசாலை அபிவி ருத்திக் குழுவின் முன்னாள் உப செயலாளர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது .

கனடாவில் வாழும் தமது பிள்ளைகளின் சார்பாக ஓய்வு நிலை அதிபர்களான வெ. ஜெயநாதன், பொன் சிவானந்தன் ஆகியோர் அப் பொருட்களை வைத்தியசாலை பொறுப்பு மாவட்ட வைத்திய அதிகாரி நடராஜா அருந்திரனிடம் வழங்கினர்.

இதற்கு இணைப்பாளராக செயற்பட்ட சமூக சேவையாளர் எம். புண்ணியநாதனும் கலந்து சிறப்பித்தார். (அ)

# சுகாதார சேவைகள் பணிமனையினரால் கல்முனை உணவகங்கள் சுற்றிவளைப்பு



அம்பாறை, மே. 09

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலுக்கு அமைவாக கல்முனை நகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் மற்றும் உணவு செய்யும் பாத்திரங்கள் கைப்பற்றப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கு அமைவாக கல்முனை நகர் பகுதிகளில் சுற்றாடல் தொழில்சார் மற்றும் உணவுப்பாதுகாப்பு சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.எம். பௌசாத் தலைமையில் உணவு மற்றும் மருந்துகள் பரிசோதர்கள், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து மேற்கொள்ளப்பட்ட இச் சுற்றிவளைப்பில் பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குழந்தைகளின் மர நடுகை நிகழ்வு களுவாஞ்சிக்குடியில்



மட்டக்களப்பு, பெப். 09

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் பல்வேறு மரநடுகைத் திட்டங்கள் கிராம சேவ கர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத் தர் திருமதி அருந்ததி சிவரெத்தி னம், விவசாய மற்றும் கைத் தொழில் பிரிவு உத்தியோகத்தர் களின் ஒழுங்கமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள் எருவில் பாரதிபுரம் முன்பள்ளி பாடசாலை வளாகம் மற்றும் களுதாவளை பொருளாதார மத்திய நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் சிரமதானம் இடம் பெற்றது.

முன்பிள்ளை பாடசாலை மாணவர்களின் பங்குபற்றுதலோடு இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மல்ராஜ், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# புஹாரி ஹதீஸ் மஜ்லிஸ் ஆரம்பம்

அம்பாறை, பெப். 09

மருதமுனையின் முதலாவது பள்ளிவாசலான மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்மா பள்ளிவாசலின் 99 ஆவது வருடாந்த புஹாரி ஹதீஸ் மஜ்லிஸ் கடந்த 6ஆம் திகதி மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது.

மருதமுனை ஜம்மியதுல் உலமா மற்றும் அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனத் தலைவர் அஷ்ஷெய்க் எப். எம். அஹமதுல் அன்சார் மௌலானா தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், உலமாக்கள் கலந்துகொண்டு விசேட மார்க்க சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்.

நிகழ்வின் ஆரம்ப உரையை மஸ்ஜிதுந் நூர் ஜும்ஆப்பள்ளிவாசல் தலைவர் எம்.ஐ.எம்முகர்ரப் நிகழ்த்தினார் செயலாளர் ஏ.ஏ புழைல், பள்ளிவாசலின் முன்னாள் தலைவர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், மரைக்காயர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)



# ஒலுவில் துறைமுகத்தில் ரின்மீன் தொழிற்சாலை!

அம்பாறை, பெப். 09

உள்ளூார் ரின்மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் நேற்று முன் தினம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அம்பாறை ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தில் அமைந்துள்ள ரின்மீன் உற்பத்தித் தொழிற்சாலையை தனியார் முதலீட்டாளர் ஊடாக புனரமைத்து மீண்டும் இயங்கச் செய்து உற்பத்தியை அதிகரிக்கவும், இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும் எடுக்கப்பட்ட தொடர் முயற்சியின் பெறுபேறாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தனியார் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கு மிடையே குறித்த ஒப்பந்தம் அமைச்சில் கைச்சாத்தானமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வங்கி முகாமையாளர்களுடன் பொலிஸார் கலந்துரையாடல்

மட்டக்களப்பு, பெப். 09

வங்கிகளின் பாதுகாப்பைப் பலப்படுத்தவது தொடர்பில், வங்கி முகாமையாளர்களுடனான கலந்துரையாடல், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

களுவாஞ்சிகுடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அபயவிக்கிரம தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், களுவாஞ்சிகுடி பிரதேசத்திலுள்ள அரச, தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, களுவாஞ்சிகுடி பொலிஸ்நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜோய், வங்கி முகாமையாளர்களுக்கு பாதுகாப்பு தொடர்பிலான விளக்கங்களையும் தெளிவூட்டல்களையும் வழங்கினார்.

நாட்டின் பல இடங்களில், வங்கிகளின் தன்னியக்க பணவைப்பு மற்றும் மீள எடுத்தல் இயந்திரங்கள் அண்மையில் களவாடப்பட்டுள்ளன.

இந்நிலையில், களுவாஞ்சிகுடிப் பிரதேசத்திலுள்ள வங்கிகளின் பாதுகாப்பைப் பலப்படுத்த பொலிஸாரின் முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்றும் வங்கி முகாமையாளர்கள் இதில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும்கேட்டுக் கொள்ளப்பட்டது. (அ)

## துருக்கி, சிரியா நிலநடுக்கம்:

# உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 ஆயிரத்தை நெருங்கியது!



டமஸ்கஸ், பெப். 09

துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 11 ஆயி ரத்தை நெருங்கியுள்ள நிலை யில், இரண்டு நாடுகளிலும் உள்ள பாதிக்கப்பட்ட மக்கள் இரண்டாவது இரவை கடும் குளிரில் கழித்துள்ளனர்.

இடிபாடுகளில் சிக்கியுள்ள வர்களை மீட்கும் பணிகளுக்கு முன்னுரிமையளித்து மீட்புக் குழுவினர் தொடர்ச்சியாக மீட்புப் பணிகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

துருக்கியின் ஹட்டே மாகா ணத்தின் மருத்துவமனை ஒன்றுக்கு முன்பாக சடலங்கள் வரிசையாக கிடத்தி வைக்கப் பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

துருக்கியில் இறப்பு எண்ணிக்கை 7,100 க்கு மேல் உயர்ந்துள்ளது. ஏற்கனவே 11 ஆண்டுகால போரினால் பேரழி விற்குள்ளான சிரியாவில் தற் போதைய அனர்த்தத்தால் 2500 க்கும் அதிகமானவர்கள் உயிரிந்துள்ளனர்.

மீட்புப் பணிகளில் ஏற்பட் டுள்ள தாமதம் காரணமாக உயிரழப்பு எண்ணிக்கை அதிக ரிக்கும் எனவும் அஞ்சப்படுகி றது.

துருக்கியின் 10 மாகாணங் களில் அவசர நிலையை பிரக டனப்படுத்தியுள்ளதாக துருக்கி ஜனாதிபதி தையிப் எர்டோகன் அறிவித்துள்ளார்.

துருக்கியின் தென்கிழக்கு பகுதியில் சிரியாவின் எல்லை யையொட்டி கடந்த திங்கட் கிழமை அதிகாலை 4.17 மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக் கம் ஏற்பட்டது.

காசியான்டெப் அருகே 17.9 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற் பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.8 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் துருக்கி - சிரியாவில் பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன.

இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட சில நிமிடங்களில் துருக்கியின் ஹரமனமராஸ் மாகாணம் எல்பிஸ்டன் மாவட்டத்தில் மீண்டும் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் 7.5 ஆக பதிவாகியுள்ளது.

இதனை தொடர்ந்து அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த பயங்கர நிலநடுக்கத்தில் துருக்கி - சிரியாவின் பல்வேறு நகரங் களில் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின.

இந்த நிலநடுக்கத்தால் 2 கோடிக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. (அ)

# நிலநடுக்கத்தால் துருக்கியின் அமைவிடம் 3 மீற்றர் நகர்ந்தது




அங்காரா, பெப். 09

துருக்கி மற்றும் சிரியாவின் சில பகுதிகளில் திங்கள்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற் பட்டது, இதனால் உயிர் மற் றும் உடைமைகள் பெருமள வில் சேதமடைந்தன. இந்த நிலநடுக்கத்தில் 9,600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையில், நிலநடுக் கத்தினால் துருக்கி அமைந்தி ருக்கும் டெக்டோனிக் தகட்டை மூன்று மீற்றர் வரை நகர்த்தியி ருக்கலாம் என்று ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

துருக்கி மற்றும் சிரியாவில் 7.8 மற்றும் 7.5 ரிச்டர் அளவில் இரண்டு பெரிய நிலநடுக்கங் கள் ஏற்பட்டன. 300இற்கும் அதிகமான நில பின் அதிர்வுகள் பதிவாகின.

திங்கட்கிழமை நிலநடுக்கத் தின் மையம் துருக்கியின் காஜி யான்டெப் நகருக்கு அருகே சுமார் 17.9 கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்தது. இந்த நகரத்தில் சுமார் இரண்டு மில்லியன் மக்கள் வசிக்கிறது.

அரேபிய டெக்டோனிக் தட்டு வடக்கு நோக்கி நகர்ந்த தால் இந்த நிலநடுக்கம் ஏற் பட்டது என்று பின்னர் நிபு ணர்கள் தெரிவித்தனர்.

துருக்கியானது அனடோலி யன் தட்டு, அரேபிய தட்டு மற் றும் யூரேசிய தட்டு ஆகியவற் றின்எல்லையில் ஆபத்தான அமை விடத்தில் உள்ளதால் அடிக்கடி நிலநடுக்கங்களுக்கு ஆளாகிறது.

ஆய்வாளர்களின் கூற்றுப் படி, அனடோலியன் தட்டுக் கும் அரேபிய தட்டுக்கும் இடையில் சுமார் 225 கிலோ மீற்றர் தூரத்திற்கு ஏற்பட்டுள்ள விரிசல் சேதமடைந்துள்ளது.

நில அதிர்வு நிபுணரும், இத் தாலிய தேசிய புவி இயற்பியல் மற்றும் எரிமலைக் கழகத்தின் தலைவருமான கார்லோ டோக்லி யோனி, பூகம்பத்திற்குப் பிறகு, துருக்கி "சிரியாவுடன் ஒப்பிடும் போது ஐந்து முதல் ஆறு மீற்றர் வரை" கூட நகர்ந்திருக்கலாம் என்று கூறினார்.

இருப்பினும், பூர்வாங்க தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு ஒரு உறுதியான முடிவை உருவாக்க கூடுதல் தகவல்கள் தேவை என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், டர்ஹாம் பல்கலைக்கழகத்தின் கட்ட மைப்பு புவியியல் பேராசிரிய ரான பாப் ஹோல்ட்ஸ்வொர்த், நிலநடுக்கத்தின் அளவைக் கருத் தில் கொண்டு தட்டு மாற் றம் "கச்சிதமாக நியாயமானது" என்று கூறினார்.

"ஒரு பூகம்பத்தின் அளவு மற் றும் நிகழும் வழுக்கமான தட் டின் நகர்வு ஆகியவற்றிற்கு இடையே மிகவும் கணிக்கக் கூடிய, பரவலாக ஆவணப்படுத் தப்பட்ட உறவு உள்ளது" என்று கூறினார்.

"6.5 முதல் 6.9 வரையிலான அதிர்வு ஒரு மீட்டர் நகர்வுடன் தொடர்புடையது - அறியப் பட்ட மிகப்பெரிய பூகம்பங்கள் 10 முதல் 15 மீற்றர் வரை நகரச்செய்யும்" என்று அவர் மேலும் கூறினார்.

"துருக்கியில் நிலநடுக்கத்தை தொடர்ந்து 3 முதல் 6 மீற்றர் வரையிலான கிடைமட்ட இடப்பெயர்வு முற்றிலும் நியாயமானது" என்று அவர் மேலும் கூறினார். (அ)

# நேற்றும் நிலநடுக்கம்

அங்காரா, பெப். 09

துருக்கியின் நூர்தாகி பகுதி யில் நேற்று 4.3 ரிச்டர் அளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது.


துருக்கியின் தென்கிழக்கு பகுதியில் சிரியாவின் எல்லை யையொட்டி அமைந்துள்ள காசியான்டெப் நகரத்தில் நேற்று முன்தினம் அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற் பட்டது. காசியான்டெப் அருகே 17.9 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.8 ஆக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் துருக்கி - சிரியாவில் பல கட் டடங்கள் இடிந்து விழுந்து தரைமட்டமானது.

இதையடுத்து, அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டது. இதனால் ஒரே நாளில் பலி எண்ணிக்கை 2 ஆயிரத்தை தாண்டியது.

இடிபாடுகளில் சிக்கியுள்ள வர்களை மீட்கும் பணியில், இரவு பகல் என பாராமல் மீட்பு குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து, நேற்று 5.5 மற்றும் 5.7 என இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்ட நிலை யில், நேற்று மீண்டும் நிலநடுக் கம் ஏற்பட்டுள்ளது. துருக்கி யின் நூர்தாகி பகுதியில் 4.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், மக் கள் பீதியில் உறைந்துள்ளனர். (அ)




# துருக்கியில் 36 மணி நேரத்தில் 100 நிலநடுக்கங்கள் பதிவாகின

அங்காரா, பெப். 09

துருக்கி- சிரியா எல்லையில் திங்கட்கிழமை அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட் டது. துருக்கி காசியான்டெப் மாகாணத்தில் உள்ள நூர்ட க்கு கிழக்கே 23 கிலோமீற்றர் (14.2 மைல்) தொலைவில் 24.1 கிலோமீற்றர் (14.9 மைல்) ஆழத் தில் நிலநடுக்கம் தாக்கியது. மேலும் 100 ஆண்டுகளுக்கு பிறகு இப்பகுதியைத் தாக்கிய சக்தி வாய்ந்த நிலநடுக்கம் இதுவாகும்.

அரசு நடத்தும் நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப் பட்ட ஆய்வில் இதுவரை பாதிக்கப்பட்ட பகுதிகளை கஹ்ராமன்மாராஸ், காசியான் டெப், சன்லியுர்பா, தியர்பாகிர், அதானா, அதியமான், மாலத்யா, உஸ்மானியே, ஹடாய் மற்றும் கிலிஸ் என பட்டியலிட்டுள்ளது.

சிரியாவின் அலெப்போ, இட்லிப், ஹமா மற்றும் லதா கியா மாகாணங்களில் ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

துருக்கியில் 4 மற்றும் அதற்கு மேற்பட்ட ரிச்டர் அளவுகளில் 100இற்கும் மேற்பட்ட நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 36 மணி நேரத்தில், துருக்கியில் 4 மற்றும் அதற்கு மேற்பட்ட ரிச்டர் அளவுகளில் 100க்கும் மேற்பட்ட நில அதிர் வுகள் ஏற்பட்டுள்ளன. பெரிய நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அதே பொதுப் பகுதியில் ஏற் படும் சிறிய நிலநடுக்கங்களே பின்அதிர்வுகள் ஆகும்.

4 ரிச்டர் அளவிலான பின் அதிர்வு பொதுவாக லேசான தாகக் கருதப்பட்டாலும், அது குறிப்பிடத்தக்க நடுக்கத்தை ஏற் படுத்துகிறது மற்றும் சுவரில் விரிசல் போன்ற சிறிய சேதத்தை ஏற்படுத்தலாம். ரிச்டர்-5 நில நடுக்கம், வரையறையின்படி, ரிச்டர்-4 ஐ விட 10 மடங்கு தீவிரமானது மற்றும் கட்டடங் களுக்கு மிதமான சேதத்தை ஏற்படுத்தும்.

ரிச்டர்-6 நிலநடுக்கம் வலு வானதாகக் கருதப்படுகிறது மற்றும் ரிச்டர்-4-ஐ விட 100 மடங்கு வலிமையானது. இந்த வகையான நிலநடுக்கம், குறிப் பாக அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளில், நிறைய சேதங்களை ஏற்படுத்தும்.

கடந்த 36 மணி நேரத்தில், தென்கிழக்கு துருக்கியில் குறைந்தபட்சம் 81 எண்ணிக்கை யிலான 4 ரிச்டர் நிலநடுக்கங் கள், 20 எண்ணிக்கையிலான 5 ரிச்டர் நிலநடுக்கங்கள், மூன்று எண்ணிக்கையிலான 6 ரிச்டர் நிலநடுக்கங்கள் மற்றும் இரண்டு 7 ரிச்டர் நிலநடுக்கங் கள் பதிவாகியுள்ளன. (அ)

# போர்டர் - கவாஸ்கர் கிண்ணம் இன்று நாக்பூரில் தொடக்கம்!



நாக்பூர், பெப். 09

போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக அவுஸ்தி ரேலியா - இந்தியா அணிகள் மோதும் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

நாக்பூரில் தொடங்கும் முதல் போட்டியில் இந்தியா மூன்று சுழல் பந்து வீச்சாளர்களுடன் களமிறங்குகிறது. நாக்பூர் மைதானத்தின் ஆடுகளம், ஆட்டத்தின் முதல் நாளில் இருந்தே சுழல் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானதாக இருக்கலாம் எனத் தெரியும் நிலையில் அந்த அணியின் தலைவர் ராகுல் இந்த முடிவை எடுத்துள்ளார்.

மேலும், இந்திய அணியில் விக்கெட் காப்பாளர், 3ஆவது சுழல் பந்துவீச்சாளர், துடுப்பாட்டத்தில் 5ஆவது வீரர் ஆகிய 3 முக்கிய இடங்களுக்கான தெரிவு பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை செய்தியாளர் களை சந்தித்த அந்த அணியின் தலைவர் கே. எல். ராகுல் கூறியதாவது:

நாக்பூர் டெஸ்டுக்கான ஆடும் பதினொருவர் அணியில் இன்னும் இறுதி செய்யவில்லை. அதற்கான வீரர்கள் தெரிவு மிகக் கடினமானதாக இருக்கும். கடந்த காலங்களில் மிகச் சிறப்பாக செயல்பட்டவர்களையே அணியில் தெரிவு செய்துள்ளோம். அவர்களில் ஆட் டத்துக்கு பொருத்தமானவர்களை முடிவு செய்வது குறித்து விவாதித்து வருகிறோம்.

நாக்பூர் மைதானத்தின் ஆடுகளத்தை ஆய்வு செய்தோம். ஆனால், அது எத்தகைய தன்மையுடன் இருக்கிறது என்பதை ஆட்டத்தின்போதே தீர்மானிக்க இயலும். எனினும், இந்திய களத்தில் விளையாடுவதால் 3 சுழல் பந்துவீச்சாளர்களுடன் களம் காண்பதற்கான யோசனை அணியிடம் இருக்கிறது. இறுதி முடிவை ஆட்டத்துக்கு முன்னதாக எடுப்போம். எவர் ஒருவரா லும் ஆடுகளத்தை பார்த்து மட்டுமே பொருத்தமான பதினொருவர் அணியை தெரிவு செய்துவிட முடியாது என்றார்.

அவுஸ்திரேலிய அணியில் பொக்ஸிங் டே டெஸ்டில் காயமடைந்த துடுப்பாட்ட வீரர் கமரூன் கிறீன் இந்தப் போட்டியில் பங்கேற்க மாட்டார். இதனால் முதல் டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா 6-ஆவது இடத்துக்கு நல்லதொரு துடுப்பாட்ட வீரரை தெரிவு செய்ய வேண்டியிருப்பதால், 4 பந்துவீச்சாளர்களுடன் களம் காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிறீன் இடத்துக்கு, மொட் ரென்ஷா அல்லது பீற்றர் ஹாண்ட்ஸ்கம்ப் ஆகியோரில் ஒருவர் தெரிவாகலமாம். இதேபோல், காயமடைந்துள்ள ஜோஷ் ஹசில்வூட்டின் இடத்துக்கு ஸ்கொட் போலண்ட் தெரிவாகலாம். 2 சுழல்பந்துவீச்சாளர்கள், 2 வேகப்பந்துவீச்சாளர்களுடன் ஆஸ்திரேலியா களம் காணும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. 2-ஆவது சுழல் பந்துவீச்சாளராக அஷ்டன் அகர், டாட் மார்பி ஆகியோரில் ஒருவருக்கு வாய்ப்பு கிடைக்கும். (ஐ)



# இந்தியாவை வெல்வது ஆஷஷைவிட கடினம்!

பெங்களூர், பெப். 09

இந்தியாவில் டெஸ்டை வெல்வது ஆஷஷை விடக் கடினமானது என்று ஸ்ரீவன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய மோதும் டெஸ்ட் தொடரான ஆஷஷ் போட்டி பிரபலமானது.

இதேபோல், இந்தியா - ஆஸி. மோதும் போர்டர் - கவாஸ்கர் கிண்ணமும் பிரபலமானது. இதில், இந்தியா முன்னணியில் இருப்பதால் ஆஸி. அந்த இடத்தைப் பிடிக்க கடுமையாக போராடி வருகின்றது.

பெப். 9ஆம் தேதி நடைபெறும் இந்தப் போட்டிக்கு சமூக வலைதளங்களில் விவாதங்கள் சூடுபிடித்துள்ளன. இந்த நிலையில், ஆஸியின் பிரபல துடுப்பாட்ட வீரர் ஸ்ரீவன் ஸ்மித்,

இந்தியாவில் டெஸ்ட் தொடரை வெல்வது என்பது மலையை சாய்ப்பது போல கடினமானது. சுழலின் தாக்கம் அதிகமாக இருக்கும் இந்திய மண்ணில் இந்தி யாவை டெஸ்டில் வீழ்த்துவது என்பது ஆஷஷ் தொடரை வெல்வதை விடப் பெரியது என்று கூறி யுள்ளார்.



# ஆஸி. ரி-20 அணியின் புதிய தலைவர் யார்?

சிட்னி, பெப். 09

அவுஸ்திரேலிய இருபது - 20 அணியின் புதிய தலை வராக மத்தியூ வேட் நியமிக்கப்பட அதிக வாய்ப்புள் ளது என்று கூறப்படுகின்றது.

அவுஸ்திரேலிய இருபது - 20 அணியின் தலைவரான அரோன் பின்ஞ் நேற்று முன்தினம் தனது ஓய்வை அறி வித்திருந்தார்.

இந்த நிலையில், பின்ஞ் ஓய்வுக்கு பின்னர் அவுஸ்தி ரேலிய இருபது - 20 அணியின் தலைவராக யாரை நியமிப்பார்கள் என ரசிகர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி அணியின் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் பட் கம்மின்ஸ் செயல்படுகிறார். அவர் மீது மேலும் ஒரு சுமையை திணிக்க அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை விரும்பவில்லை. அவுஸ்திரேலிய அணிக்கு அடுத்த இருபது - 20 போட்டி இனி ஒகஸ்ட் மாதம்தான் உள்ளது.

எனவே புதிய அணித் தலைவரை நியமிக்க ஆஸி. கிரிக்கெட் அவசரம் காட்டாது. என்றாலும் விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் இருபது - 20 அணியின் தலைவராக நியமிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. ஹசில்வூட், அடம் சம்பா, அஷ்ரன் அகர் ஆகியோரின் பெயர்களும் அடிபடுகின்றன. (ஐ)

# இரண்டு நாடுகளுக்கு எதிராக சதம் அடித்த சிம்பாப்வே வீரர்!

புலவாயோ, பெப். 09

சிம்பாப்வே அணியின் ஹாரி பேலன்ஸ் மேற்கிந் தியத் தீவுகள் அணிக்கு எதிராக சதம் அடித்துள்ளார். இந்த சதத்தின் மூலம் இரு அணிகளுக்கு எதிராக சதம் அடித்த சிம்பாப்வே வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

முதல் டெஸ்ட் போட்டி கடந்த 4ஆம் திகதி தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந் தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி 143 ஓவர்களை எதிர்கொண்டு6 விக்கெட்களை இழந்த நிலையில் 447 ஓட்டங்களை எடுத்தது. இதில், தொடக்க ஆட்டக்காரர் தேஜ்நரின் சந்தர்போல் இரட்டை சதமடித்து அசத்தினார்.

சிம்பாப்வேயின் பந்துவீச்சில் பிரண்டன் மவுடா 5 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதையடுத்து சிம்பாப்வே தனது முதல் இனிங்ஸை தொடங்கியது. அந்த அணியின் ஹாரி பேலன்ஸ் பொறுப்புடன் ஆடி சதமடித்தார்.

அவர் 231 பந்துகளில் 137 ஓட்டங்களை சேர்த்திருந் தார். இதன் மூலம் இரண்டு நாடுகளுக்காக டெஸ்ட் சதம் அடித்த இரண்டாவது வீரரானார் சிம்பாப்வேயின் ஹாரி பேலன்ஸ். அவர் கடந்த பத்தாண்டுகளில் இங்கி லாந்துக்கு எதிராக நான்கு சதங்களை அடித்திருந்தார்

இறுதியில், சிம்பாப்வே அணி முதல் இனிங்ஸில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 378 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.





# துருக்கி உதைபந்து வீரர் ஐயுப் நிலநடுக்கத்தில் பலி!

அங்காரா, பெப். 09

துருக்கி உதைபந்தாட்ட அணியின் கோல் காப்பாளர் அஹ்மத் ஐயுப் டர்கஸ்லான் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிலநடுக்கத்தில் உயிரிழந்தார்.

இந்த விடயத்தை அவரின் கழகமான யெனி மலட்யாஸ்போர் உறுதிப்படுத்தியுள்ளது.

"எங்கள் கோல் காப்பாளர் அஹ்மத் ஐயுப் டர்கஸ் லான் நிலநடுக்கத்தின் இடிபாடுகளில் சிக்கி தனது உயிரை இழந்தார். அவரின் ஆன்மா இளைப்பாறாட் டும்" என்று அந்தக் கழகம் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

28 வயதான டர்கஸ்லான், 2021 இல் இணைந்த பிறகு துருக்கி இரண்டாம் பிரிவு கழகமான யெனி மலட யாஸ்போருக்கு ஆறு முறை விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாணய நிதியத்தின் கடன் திட்டத்துக்கு உத்தரவாதம் வழங்கியது பாரிஸ் கிளப்

கொழும்பு, பெப். 09

**இலங்கைக்கான கடன் உதவிகள் சர்வதேச நாணய நிதியம் வழங்குவதற்கான உத்தரவாதத்தை தாம் வழங்குவதாக பாரிஸ் கிளப் நாடுகள் அறிவித்துள்ளன.**

இலங்கையின் நீண்ட கால கடன் நிலைத்தன்மை உட்பட இலங்கையின் பெரிய பொருளாதார மற்றும் நிதி நிலைமையை ஆராய்ந்த பின்னர் இதனை அறிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத் தின் ஆதரவுடன் கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், ஏனைய கடன் வழங்குநர்களுடனான பேச்சுக்கு ஆதரவளிக்கவும் தீர்மானித்துள்ளன.

இலங்கையின் கடன் மறு சீரமைப்பு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான தங்கள் அர்ப்பணிப்பை பாரிஸ்கிளப் நாடுகள் வெளியிட்டுள்ளன.

அத்தோடு இந்தியா வழங்கிய குறிப்பிட்ட மற்றும் நம்பகமான நிதி உத்தரவாதங்களுக்கும், பாரிஸ் கிளப்புடனான ஒத்துழைப்புக்கும் உறுப்பினர்கள் மேலும் பாராட்டு தெரிவித்தனர்.

இதேநேரம் ஹங்கேரி, சவூதி அரேபியா, சீனா உட்பட இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய தரப்பினரும் இவ்வாறான செயற்பாட்டினை முன்னெடுக்க வேண்டும் என அவை வலியுறுத்தியுள்ளன.

(அ)

# பாரிஸ் கிளப் உறுப்பினர்கள் அளித்த உறுதிமொழியை வரவேற்றது அமெ.

கொழும்பு, பெப். 09

இலங்கைக்கான கடன் உத்தரவாதம் குறித்து இந்தியா வழங்கிய உறுதிமொழியை அடுத்து பாரிஸ் கிளப் உறுப்பினர்கள் அளித்த உறுதிமொழியை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

பாரிஸ் கிளப்பின் இந்த அறிவிப்பை கண்டு மகிழ்ச்சி அடைவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

ஹங்கேரி மற்றும் சவூதி அரேபியாவுடன் இணைந்து சீனா உட்பட மீதமுள்ள நாடுகளின் வகிபாகத்திற்கு பாரிஸ் கிளப் விடுத்த அழைப்புக்கு அவர் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கை அதிகாரிகளுக்கும் சர்வதேச நாணய நிதிய ஊழியர்களுக்கும் இடையில் ஊழியர் மட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் டொலர் கடனை பெற்றுக்கொள்வதற்கு இலங்கைக்கு இந்த உத்தரவாதங்கள் முக்கியமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹஜ்ஜில் அக்பர் விடுதலை

கொழும்பு, பெப். 09

சிறிலங்கா ஜமாத் இஸ்லாம் அமைப்பின் முன்னாள் தலைவர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜில் அக்பர் தனக்கு எதிராக சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் கொழும்பு நீதவானால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

அவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு அண்மையில் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அவர் மீதான சகல குற்றச்சாட்டுகளையும் வாபஸ் பெறுமாறு பொலிஸ் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்தது. அதன்படி அவர் நேற்று நீதவானால் விடுதலை செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சியங்களின் அடிப்படையில் அவருக்கு எதிராக சில குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

பின்னர் அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

தன்னைக் கைது செய்து, காவலில் வைத்திருப்பது சட்டவிரோதமானது என்றும், தனது அடிப்படை உரிமை மீறல் என்றும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இடைக்கால நடவடிக்கையாக, அவர் ஜனவரி 2022 இல் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், தற்போது அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# செல்பி எடுக்கச் சென்ற தந்தை, மகள் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 09

புலஸ்திபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் கும்புக்கனாவுற ஓயாவில் தவறி விழுந்து தந்தையும், மகளும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

புலஸ்திபுர, ஒனேகம பிரதேசத்தில் கும்புக்கனாறுவ ஓயாவில் தவறி விழுந்து 46 வயதுடைய நபரும் அவரது 12 வயது மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

பிரதேசவாசிகள், பொலிஸார், கடற்படையினரும் இணைந்து காணாமல் போன வர்களை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டதையடுத்து அவர்கள் விழுந்த இடத்தில் இருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தையும் மகளும் செல்பி எடுக்க முற்பட்ட போது ஆற்றில் தவறி விழுந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் 46 வயதுடைய நபர் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார் எனவும் கூறப்பட்டது.

(அ)

# இலங்கையின் கையிருப்பு 2 பில்லியன் டொலர்

கொழும்பு, பெப். 09

2023 ஜனவரி இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 2.1 பில்லியன் டொலர் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2022 டிசெம்பரில் இருந்து உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துப் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீத அதிகரிப்பு என மத்திய வங்கி கூறியுள்ளது.

அந்நிய செலாவணி கையிருப்பு 2022 டிசம்பரில் 1.8 பில்லியனில் இருந்து 2023 ஜனவரியில் 2 பில்லியன் (10.8%) டொலராக உயர்ந்துள்ளது.

(அ)

# கொழும்பு நீதிவான் நீதிமன்ற லிகிதர் சி.ஐ.டியினரால் கைது

கொழும்பு, பெப். 09

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் பிரதான வழக்கு அறையில் இருந்த 68 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்கம் காணாமல் போன சம்பவம் தொடர்பில், வழக்கு அறையின் பாதுகாவலராக இருந்த நீதிமன்ற லிகிதர் ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த வழக்குப் பொருட்கள் காணாமல் போன வேளையில் இந்த சந்தேகநபர் பிரதான நீதவான் நீதிமன்றத்தின் வழக்குப் பொருட்கள் அறையின் பாதுகாவலராக கடமையாற்றினார் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# பாடசாலைச் சீருடைகள் விரைவாக வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, பெப். 09

மாணவர்களுக்கான பாடசாலை சீருடைகளை மார்ச் 15ஆம் திகதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிர்கால கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேவையான சீருடைகளில் எழுபது சதவீதத்தை வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட சீன அரசாங்கம், ஏற்கனவே தனது முதல் தொகுதியை அனுப்பியுள்ளதாகவும், எஞ்சிய முப்பது சதவீதத்தை உள்ளூர் தனியார் வர்த்தகர்கள் வழங்குவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(அ)

# முத்திரை விற்பனை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 09

முத்திரைகளின் விலை அதிகரித்துள்ள போதிலும் முத்திரைகளின் விற்பனையும் அதிகரித்துள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது முத்திரை விற்பனை மூலம் கிடைத்த வருமானம் கடந்த ஆண்டு (2022) ஓகஸ்ட் முதல் டிசெம்பர் 31 வரை 742 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளதாக பதில் தபால் மா அதிபர் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பத்துடன் தபால் திணைக்களம் முன்னோக்கி நகர்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# முச்சக்கரவண்டி விபத்தில் 9 மாத குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, பெப். 09

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநாகல் வெவ ரவும வீதியில் இடம்பெற்ற விபத்தில் 9 மாத ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

பன்தம்பலாவ பகுதியில் இருந்து பமுனுகெதர நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தொலைபேசிக் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த ஓட்டோச் சாரதி மற்றும் நான்கு பயணிகளும் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 9 மாதக் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

குருநாகல், பமுனுகெதர பிரதேசத்தை சேர்ந்த நால்வரே இந்த விபத்தில் சிக்கினர்.

(அ)

# துருக்கி ஜனாதிபதியுடன் உரையாடினார் ரணில்

கொழும்பு, பெப். 09

துருக்கி ஜனாதிபதி ரசெப்தயிப் எர்டோகனுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி வாயிலாக உரையாடினார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாரிய அழிவைச் சந்தித்துள்ள துருக்கி மக்களுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க இலங்கை மக்கள் தயாராக உள்ளார்கள் என்று இதன் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் பின்னர் காணாமல்போயுள்ள இலங்கைப் பெண்ணைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

69 வயதான குறித்த பெண் தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

## 13இற்கு...

பிக்குமாரை பொலிஸார் தடுக்க முற்பட்டபோது இவ்வாறு முறுகல் ஏற்பட்டது.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பௌத்த பிக்குமார் நேற்று கோட்டை, பரகும்பா பிரிவெனாவுக்கு அருகில் இந்த எதிர்ப்புப் பேரணியை ஆரம்பித்தனர்.

பேரணியை பொலிஸார் தடுத்த போதும், பிக்குமார் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் தியத்த பூங்காவை கடந்து பொல்துவ சந்தியை அடைந்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குமார் சில 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரதியொன்றை தீயிட்டு கொளுத்தியிருந்தனர். (அ)

## பொலிஸ்...

ஆண்டு பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டோம். நம் இருவருக்கும் பொதுவான ஒரு கனவு உண்டு. நாம் இருவரும் பாராளுமன்றத்தில் இருக்கின்ற போதே இலங்கையின் இனப் பிரச்னைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்குதல் ஆகும். அந்தக் கனவு பற்றி அன்று முதல் இன்று வரை நாம் கலந்துரையாடுகின்றோம் - முயற்சி செய்கின்றோம். முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும், இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடைய செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு - கிழக்கு யுத்தம் முழு நாட்டையும் பாதித்தது. பல பிரதேசங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. முழுமையான வடக்கு மாகாணமும் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் பல பிரதேசங்கள் யுத்தம் காரணமாக பெரும் துன்பங்களை அனுபவித்தது. இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு செயல்படுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். இதற்காக விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவோம்.

அதிகாரப் பகிர்வு செயன்முறையை முறையாக மற்றும் உரியவாறு நடைமுறைப்படுத்த பின்வரும் சட்டங்களுக்கான திருத்த வரைவுகள் தயாரிக்கப்படும். 1992ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க அதிகார பகிர்வு (பிரதேச செயலாளர்கள்) சட்டம், 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவு ஏற்பாடுகள் சட்டம் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்த) சட்டம்

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்துக்கு இடையில் ஒருங்கிணைப்புப் பணிகளை முறைமைப்படுத்துவதற்காக நவீன முறையில் மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையை ஸ்தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த அனைத்து சட்டங்கள் மற்றும் வரைவுகளை நாம் பாராளுமன்றத்தின் தேசிய சபைக்கு சமர்ப்பிப்போம். அது தொடர்பாக கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தேசிய சபைக்கு வழங்கப்படும்.

பிரதி பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகள் தற்போது மாகாண எல்லைகளின் பிரகாரம் காணப்படுவதில்லை. இதன் காரணமாக பிரயோக ரீதியான பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆகவே, மாகாணங்களின் பிரகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்தவித மாற்றங்களும் இடம் பெறமாட்டாது - என்றார். (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 12இலும்)

## அரசியல்...

விடவேண்டும் என்பதே எம் இருவரினதும் பொது கனவாக இருந்தது. அந்த கனவு தொடர்பில் அன்று முதல் இன்று வரை பேச்சு நடத்துகின்றோம். முயற்சிகளை முன்னெடுக்கின்றோம்."-என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசியல் தீர்வுக்காக இதற்கு முன்னர் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. இம்முறை எப்படியாவது இதனை வெற்றியை நோக்கி நகர்த்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். இதற்கு உங்கள் அனைவரினதும் (எம்.பிக்களின்) ஒத்துழைப்பு அவசியம் எனவும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அத்துடன், தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வை காண வேண்டியதன் அவசியத்துவத்தை எடுத்துரைத்த ஜனாதிபதி, காணி விடுவிப்பு குறித்தும் கருத்து வெளியிட்டார். (அ)

## வரிக்கொள்கை...

புதன்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரச நிறுவனங்கள் அனைத்தையும் மறுசீரமைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. இருப்பினும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஒரு சில கடுமையான தீர்மானங்களை செயல்படுத்த வேண்டியுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள 55 அபிவிருத்தித் திட்ட அலுவலகங்களை மூடுவதற்கும் 33 அபிவிருத்தி அலுவலகங்களின் செயல்பாடுகளை இடை நிறுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்காவிடின் அதன் சுமையை நாட்டு மக்கள் சுமக்க நேரிடும்.

பொருளாதார மீட்சியை இலக்காகக் கொண்டு புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வரி திருத்தங்கள் ஒரு தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். வரி கொள்கை வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும்.

போராட்டத்தில் ஈடுப்படும் உரிமை அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு. போராட்டங்கள் பிற தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும். தொழில் துறையினருடன் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## மக்கள்...

பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், தமிழ் மக்கள் கூட்டணியின் வி. மணிவண்ணன், வேலன் சுவாமி ஆகியோரே இவ்வாறு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புகளை கண்டித்து சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி பேரணிக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். இந்த அழைப்பின் பேரில் பேரணி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகி நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நிறைவடைந்தது.

இந்தப் பேரணியில் பங்கேற்றமை சட்டவிரோதமானது என்று தெரிவித்தே பொலிஸார் இவர்களை விசாரணைக்கு அழைத்துள்ளனர். (ஐ)

## தேர்தலுக்கான...

உள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க உயர்நீதிமன்றில் வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சட்டத்துக்கு அமைவாகவும், உறுதிமொழிகளுக்கு அமைவாகவும் நடத்துவதற்கு வசதியாக நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் கலந்தாலோசித்தே, இந்த வாக்குமூலத்தை சமர்ப்பிப்பதாக சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத் தலைவரும், இலங்கை மின்சார சபையின் தலைவரும், மின்சாரத்தை வழங்குவதில் உள்ள சிரமங்கள் குறித்து அறியப்படுத்தி உள்ளனர்.

எனினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன தேர்தல் நோக்கத்திற்காக முறையே எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளன.

தேர்தல் நோக்கத்திற்காக எரிபொருள் மற்றும் மின்சார விநியோகத்தை மறுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் தேர்தல் பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக 10,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் உயர்நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 10,000 மில்லியன் ரூபாவை ஒரே தடவையில் ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமில்லை.

முந்தைய தேர்தல்களின் தரவுகளின் படி, தேர்தலுக்கான மொத்தச் செலவில் 25 வீதத்துக்கும் குறைவான தொகையே தேர்தலுக்கு முன்பாகச் செலவிடப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஒற்றையாட்சியா...

கூறியுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அத்துடன், தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை பேயைப் போலவும் சிங்கள மக்கள் சமஷ்டி ஆட்சியை பிசாசை போலவும் பார்க்கிறார்கள். முன்வைக்கப்பட்ட கொள்கை திட்டத்தை முழுமையாக செயல்படுத்தினால் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும். ஒற்றையாட்சி முறைக்குள் அதிகார பகிர்வை சாத்தியப்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் அக்கிராசன உரையை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி முன்வைத்த கொள்கை திட்டத்தை முழுமையாக பின்பற்றினால் பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சமூக கட்டமைப்பில் காணப்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் விசேட பொறிமுறைகள் கொள்கை திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டி ஆட்சியா என்பது தற்போதைய பிரச்னையல்ல. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பது தற்போதைய பிரதான இலக்காக கருத வேண்டும் - என்றார். (ஐ)

## சலுகைகளுக்கு...

எரிபொருள் கொடுப்பனவுகள், வீடுகள் மற்றும் மருத்துவ பலன்கள் போன்ற பணமில்லாத சலுகைகளுக்கு செலுத்த வேண்டிய வரியைச் செலுத்துவதில் இருந்தே விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பணிப்புரையின் பேரில் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் இந்த சுற்றறிக்கை செவ்வாய்க் கிழமை வெளியிடப்பட்டது.

2013 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஊழியரின் ஆதாயங்கள் மற்றும் இலாபங்களை சுற்றறிக்கை கணக்கிடுகிறது. (ஐ)

## வடக்கு...

பிரகடன உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "காங்கேசன்துறை துறைமுகம் நவீன மயப்படுத்தப்படும்- விரிவாக்கப்படும். திருகோணமலை நவீன சர்வதேச நகரமாக அபிவிருத்தி செய்யப்படும்.

மோதல்களுக்கு அகப்பட்டு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைந்த கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்காக விசேட அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்." - என்றார். (அ)

## தமிழ்...

சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். படிப்படியாக இந்த சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்."

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பாராளுமன்றில் அவர் நேற்று ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடக்கு மாகாணமும் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் பல பிரதேசங்கள் யுத்தம் காரணமாக பாரிய துன்பங்களை அனுபவித்தன.

இப்பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு செயற்படுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். அப்பிரதேசங்களுக்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவோம்.

வடக்கில் காணி தொடர்பாக தீர்க்கப்படாத மேலும் பிரச்னைகள் உள்ளதனை நாம் அறிவோம். பலாலி முகாமுக்காக கையேற்கப்பட்டுள்ள 100 ஏக்கர் காணிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன.

மேலும் காணிகள் தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக இராணுவம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படுகிறது. ஏனைய பாதுகாப்பு முகாம்களை அண்மித்த காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளது. ஆனாலும் தமக்கு உரித்தான பல காணித் துண்டுகள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால் மக்களுக்கு பாரியளவில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

மொனராகலை தொடக்கம் யாழ்ப்பாணம் வரை மக்கள் இப்பிரச்னையை எதிர்கொண்டுள்ளார்கள்.

1985 ஆம் ஆண்டின் வரைபடத்தின் பிரகாரம் காடுகள் மற்றும் காணிகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிட்டு இந்த அநீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

காணாமல்போன நபர்கள் தொடர்பாக கண்டறிவதற்கான முறைமையை நாம் முறைமைப்படுத்தி துரிதப்படுத்துவோம்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பெயரில் சிறைவைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றியும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். படிப்படியாக இந்த சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# நேரடி வரிகளை அதிகரித்து வரிச்சுமையை குறைக்கலாம்

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

கொழும்பு, பெப். 09

நேரடி வரிகளை அதிகரிப்பதன் மூலம் மக்களின் ஒட்டுமொத்த வரிச்சுமையை குறைக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய நிலை தொடர்ந்தால் அரச ஊழியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்க முடியும். இந்த ஆண்டு இறுதியில் வட்டி விகிதங்களை குறைக்க முடியும்.

நான் பிரபலமடைவதற்காக இந்த பதவியை பெறவில்லை. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்ப செயற்பட்டு வருகிறேன்.

அதற்காக இந்த வருட இறுதிக்குள் பணவீக்க வீதத்தை ஒற்றை இலக்கமாக குறைக்கும் இலக்குடன் நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

புதிய வரிக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவது அரசியல் ரீதியாக விரும்பத்தகாத தீர்மானம் என்றாலும் நாட்டைக் கட்டியெழுப்ப அத்தகைய தீர்மானங்களை எடுக்கத் தயாராக உள்ளேன்.

இதன் பலன்களை எதிர்வரும் 2-3 ஆண்டுகளில் மக்கள் உணர்ந்து கொள்வார்கள் - என்றார். (அ)

# “பொருளாதார யுத்தத்தை எதிர்நோக்கி உள்ளோம்”

கொழும்பு, பெப். 09

நாம் இன்று ஒரு பொருளாதார யுத்தத்தை எதிர்நோக்கி உள்ளோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஆற்றிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் இன்று ஒரு பொருளாதார யுத்தத்தை எதிர்நோக்கி உள்ளோம். இந்த யுத்தம் வடக்கு - கிழக்கு யுத்தத்தை விட ஒரு தீர்க்கமான யுத்தமாகும்.

வடக்கு-கிழக்கு மோதலில் இனங்கள் பிளவுபட்டன. ஆயினும் இந்த யுத்தத்தில் அனைத்து இனங்களும் ஒன்றாக இணைந்து போராடவேண்டியுள்ளது.

பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல் வழி விடுவோமாயின் இப்பொருளாதார யுத்தத்தில் நாம் தோல்வியடைவோம். அவ்வாறு இடம்பெறுமாயின் சில அரசியல் கட்சிகள் கூறுவது போன்றதொரு கற்பனை உலகம் எமக்கு உரித்தாகாது.

நாம் பொருளாதார காலணித்துவத்துக்கு உட்படுவோம். ஆகவே நாம் அனைவரதும் பொறுப்பு யாதெனில் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு இப்பொருளாதார யுத்தத்தை வெற்றிகொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல் ஆகும்.

பொருளாதார யுத்தத்தை வெற்றி கொள்வதற்கும் அதன் பின்னர் அபிவிருத்தியடைந்த பொருளாதாரம் ஒன்றை எமது நாட்டில் உருவாக்குவதற்கும் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையும் சமாதானமும் முக்கியமானதாகும்-என்றார். (அ)

# கொள்கைப் பிரகடன உரை மீது சபையில் இரண்டு நாள் விவாதம்

கொழும்பு, பெப். 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பாக இரண்டு நாள் விவாதம் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு அண்மையில் கூடியபோது இந்த தீர்மான் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசாங்க கொள்கை அறிக்கை மீதான ஒத்திவைப்புவேளை விவாதம் இன்று மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

இரண்டாம் நாள் விவாதம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது. (அ)

# எங்களைச் சுதந்திரமாக நடமாட வைத்தார் ரணில்



## பஸில் ராஜபக்ஷ பாராட்டு

கொழும்பு, பெப். 09

**ஆளும் பொதுஜன பெரமுன கட்சியினால் இலங்கையின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட இரண்டு முக்கிய தேவைகளை ரணில் விக்ரமசிங்க அடைந்துள்ளார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற தொலைக்காட்சி உரையாடல் ஒன்றில் கருத்து தெரிவித்த பஸில் ராஜபக்ஷ, நாட்டில் சுதந்திரத்துடன் அரசியலில் ஈடுபடுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அமைதியான சூழலை ரணில் விக்கிரமசிங்கவே முதலில் ஏற்படுத்தினார் என்றார்.

“‘அரகலய’ காரணமாக, நாங்கள் எங்கள் வீட்டைவிட்டு வெளியே செல்ல முடியவில்லை. மேலும் அரசியல்வாதிகளின் பல சொத்துக்கள் பொதுமக்களால் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டன. ஆனால் ரணில் விக்கிரமசிங்க அந்த நிலையை மாற்றியமைத்தார்” என்று அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரண்டாவதாக, எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் வரிசைகள் மற்றும் 10 மணிநேர மின்வெட்டு போன்ற முக்கிய பிரச்னைகளை ரணில் விக்கிரமசிங்கவால் தீர்க்க முடிந்தது.

தற்போது, அந்த சமூகப் பிரச்னைகள் எதையும் நாங்கள் எதிர்கொள்ளவில்லை. அவர் அத்தகைய பிரச்னைகளை தீர்க்கும் திறன் கொண்ட ஒரு நபர் என்று நாங்கள் நம்பினோம், அவர் அதை நிரூபித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதிக்கான தெரிவு சரியானது என்பதையே இது காட்டுகிறது- என்றார். (அ)

# பெருந்தோட்ட மக்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்துவோம்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 09

பெருந்தோட்ட மக்கள் தொடர்பாகவும் நாம் விசேட கவனம் செலுத்துவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஆற்றிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் பெருந்தோட்டகைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக அவர்கள் இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார்கள்.

பெருந்தோட்டத் துறைக்காக பாரியளவு சேவையாற்றிய சௌயமூர்த்தி தொண்டமானும், நானும் ஒன்றாக அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டோம். நாம் இருவரும் பெருந்தோட்ட மக்களின் நலனுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட்டோம்.

தற்போது பெருந்தோட்ட மக்களின் சட்ட ரீதியான அனைத்து உரிமைகளையும் நாம் வழங்கியுள்ளோம். ஆனாலும் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பாக பல்வேறு சிக்கல்கள் இன்னும் எஞ்சியுள்ளன.

இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நாம் பெருந்தொட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

200 வருடங்களாக இலங்கையின் பொருளாதாரத்தை வளம் பெறச் செய்வதற்கு பாடுபடும் அவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் இலங்கை மக்களின் ஒரு பிரிவினராக மாற்றப்பட வேண்டும் - என்றார். (அ)

# புதிய வரிமுறைக்கு எதிராக நேற்று கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, பெப். 09

அரசாங்கத்தின் புதிய வருமான வரி முறைக்கு எதிராக அரசாங்க மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் கூட்டு தொழில் வல்லுநர்கள் முன்னெடுத்த போராட்டம் காரணமாக கொழும்பு கோட்டை பகுதியில் நேற்று நண்பகல் கடும் பதற்றமான சூழல் நிலவியது.

அங்கு சுமார் ஒரு மணி நேரம் மறியலில் ஈடுபட்டவர்கள் அமைதியான முறையில் கலைந்து சென்றனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் திரண்டதையடுத்து, ரயில் நிலையத்துக்கு செல்லும் அனைத்து வீதிகளையும் பொலிஸார் மூடியதோடு, வீதியின் இருபுறமும் பாதுகாப்பு வளையத்தை அமைத்து ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேறுமாறு அறிவித்தனர்.

இந்த அறிவிப்புக்கு ‘ஹூ’ என்று கூச்சலிட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

போராட்டக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து இராணுவம் அழைக்கப்பட்டது. இராணுவம் இரண்டாவது பாதுகாப்பு வளையமாக போராட்டத்தைச் சுற்றி நின்றது.

நாட்டின் பிரதான மற்றும் பெரிய தொழிற்சங்கங்களான துறைமுக அதிகாரசபை, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் உட்பட கிட்டத்தட்ட 100 தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டன. (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.